அமரர்

தம்பிரத்தினம் நாகம்மை

அவர்களின் அமரத்துவம் குறித்த

நாகரத்தின மலர்

09.07.2021

Digitized by
noolaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் கிழக்கு
செட்டிய குறிச்சியை வாழ்விடமாகவும், வட்டக்கச்சியைத்
தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட
உயர்வேளாண் குல

அமரர்

தம்பிரத்தினம் நாகம்மை

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து

ஆக்கப்பெற்ற 31ஆம் நாள் நினைவு மலர

09.07.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம் இனிய தெய்வங்களுக்கு சமர்ப்பணம்

எம்மைப் பத்து மாதம் சுமந்து
சீராட்டிப் பாராட்டி
மடிமீதும் தோள் மீதும்
கனவோடு
பாலூட்டிச் சோறூட்டி
எண்ணும், எழுத்தும்
கற்றிட வழிகாட்டி
வாழ்க்கைப் பாடமதை
வம்சம் விளங்க
நெறி காட்டிய – எம்
கண்கண்ட தெய்வங்களுக்கு
இம்மலரைக்
காணிக்கையாக்குகின்றோம்.
சுபம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனி வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

தோற்றம்
20
06
1926

மறைவு
09
06
2021

அமரர்

தம்பிரத்தினம் நாகம்மை

திதி வெண்பா

பிலவ ஆண்டு ஆனித் திங்கள் பூண்ட அமாவாசை
அமிர்த சித்தத்தில் சீர் பெருமையுடை
சீமாட்டி நாகம்மா மருதடி விநாயகர் தாள்
அடைந்தார் காண்.

Digitized by Arunaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அகத்திய முனிவர் அருளிச் செய்த
பிள்ளையார் கதைக் காப்பு

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

தேவாரம்

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகம்

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே

திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே

திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம்

அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலைஇவ்வா
றறிநீயென் றருள்செய்வார்

திருப்புகழ்

நீலங்கொள் மேகத்தின் ..... மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் ..... டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் ..... மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் ..... தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் ..... டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் ..... குலகாலா
நாலந்த வேதத்தின் ..... பொருளோனே
நானென்று மார்தட்டும் ..... பெருமாளே.

வாழ்த்து

ஓம் நம பார்வதீ பதயே நமக ஹர ஹர மகாதேவா
ஓம் நம பார்வதீ பதயே நமக ஹர ஹர மகாதேவா
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ! ஓம் சாந்தி!

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

திருமதி. தம்பிரத்தினம்

★★★——— நாகம்மை

அவர்களின் ———★★★

வாழ்க்கை வரலாற்றுத் தடங்கள்

தோற்றம் :-

சிவபூமி என அழைக்கப்படும் இலங்கைத் தீவின் வடபால் யாழ்ப்பாணம் நல்லூரில் வசித்த திருவாளர் கணபதிப்பிள்ளை, திருவாட்டி நாகமுத்து தம்பதியினருக்கு 20.06.1926 தலைப்பிள்ளையாக நாகம்மை அவதரித்தார். சண்முகலிங்கம், உலகநாதன், புவனேஸ்வரி, ஜெயலட்சுமி, கனகசபை, கோபாலசிங்கம், பரமேஸ்வரி, ராசலட்சுமி ஆகிய உடன்பிறப்புக்களுடன் கூடி அவர்களின் கல்வியிலும் வளர்ச்சியிலும் அக்கறையுடையவராகவும், தந்தை தாயாருக்கு உறுதுணையாகவும் வாழ்ந்து வந்தார்.

கல்வி :-

செல்வி.க.நாகம்மை **"தோன்றிற் புகழொடு தோன்றுக"** என்னும் வள்ளுவன் வாக்கின் வரையறை கொண்டே நல்லூரிலிருந்து வேம்படி மகளிர் கல்லூரியில் வகுப்பு ஒன்று தொடக்கம் ஆறாம் வகுப்பு வரையும் பின் முத்துத்தம்பி பாடசாலையில் ஏழாம் வகுப்பு முதல் உயர்கல்வி வரை கற்று பாடசாலையில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள், சமய நெறி விழாக்கள், குருபூசை தின ஆராதனைகள் மற்றும் பாடசாலை விழாக்களிலும் ஏனைய பேச்சுப் போட்டி, சமய அறிவுப் போட்டி, விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குகொண்டு சிறுவயதிலேயே சகலதுறைகளிலும் முன்னேறுவதை தனது குறிக்கோளாக எண்ணிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டார். அத்துடன் கலைகளான சங்கீதம், ஓவியம் மற்றும் சிற்ப, கைவேலைகள், சமையற்கலைகளில் அதி ஆர்வம் கொண்டிருந்தார். அவை தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு தனது ஆற்றலை வெளிக் கொணர்வதிலே முன்னின்று உழைத்தவர். அதன் பேறாக இளவயதிலேயே பல பாராட்டுதல்களையும், பரிசுகளையும் பெற்றுள்ளார்.

மட்டுவிலில் வாழ்ந்த சீமாட்டி

இவர் 1949ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பயிற்சிக் கல்லூரியில் தனது பயிற்சியை நிறைவு செய்து 1950ஆம் ஆண்டு அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள மருதங்கடவெல முஸ்லிம் கல்லூரியில தனது அளப்பரிய ஆசிரியப்பயிற்சி சேவையை ஒரு வருடம் ஆற்றிக்கொண்டிருக்கும் பொழுது (அ.தம்பிரத்தினமும் அனுராதபுரத்தில் அரசகடமை மேற்கொண்டார்) நாகம்மைக்கும் பரம்பரை பரம்பரையாக சாவகச்சேரி மட்டுவில் கிழக்கில் உயர்குடியான செட்டியார் குலத்து குறிச்சியில் புகழ்பூத்த சித்த ஆயுர்வேத வைத்திய கலாநிதி உயர்திரு அருணாசலம் ஆச்சிமுத்து தம்பதியினரின் இளைய புத்திரனாக 1925ஆம் ஆண்டு வைகாசி மாதம் 17ஆம் திகதி அவதரித்த தம்பிரத்தினம், முன்னாள் சிறைச்சாலை உத்தியோகத்தரும் பிரபல ஆயுர்வேத வைத்திய கலாநிதியுமாகிய மைனர் தம்பிரத்தினத்திற்கும் (இரத்தினம்) 1950ஆம்ஆண்டு அன்பு கலந்து திருமணம் ஆகியது. மட்டுவில் நற்கிராமம். வந்தோரை வரவேற்று உபசரிப்பது மட்டுமல்ல, பன்றித்தலைச்சி அம்மன் அனைத்து மக்களுக்கும் அருள்பாலிக்கும். அழகிய மட்டுவில் கிராமத்தில் வாழ்ந்தனர். அத்துடன் தினசரி ஒரு ரூபாய் வீதம் சேமித்து வீடு சிறுக கட்டி பெருக வாழ்ந்தீர்களே! தங்களது இனிய இல்லற வாழ்வில் தலை மகளாக தந்தைக்கு ஏற்ற பரம்பரை வைத்தியராக உள்ளூராட்சி சபை ஆயுர்வேத வைத்திய கலாநிதியாக திருமதி சித்திராதேவி, முன்னாள் பல நோக்கு கூட்டுறவு சங்கக்கடை முகாமையாளர் திரு. ரவீந்திரன, முன்னாள் அஞ்சல் அதிபரும் கனடா CIBC வங்கி ஊழியருமான திரு உருத்திரன், லண்டனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபதமெய்திய இலங்கை வங்கியின் முன்னாள் ஊழியர் மோகன், பல நோக்கு கூட்டுறவு சங்கக்கடையின் முன்னாள் விற்பனையாளர கனடா மொன்றியலில் வாழும் சந்திரன், இலங்கையில் ஆசிரியராக பணி புரிந்து தற்போது கனடாவில் வாழும் இந்திரகுமாரி, மீன் வளத் துறையில் பணி புரிந்து தற்போது கனடாவில் வாழும் திரு.மகேந்திரன், ஆனையிறவு இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய திரு.சுரேந்திரன், தற்போது கமக்காரரும், விற்பனையாளரும் ஆகிய திரு தனேந்திரன், கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி சுனேத்ரா பத்துப்பிள்ளைகளுக்கும் அன்பான தாயாகவும், கணவனுக்கு நல்ல மனைவியாகவும், உறவினருக்கும், விருந்தினருக்கும் நல்ல உபசரிப்பாளராகவும் பூமியின் பந்தங்கள் எல்லாம் சொல்லி வாழ்ந்தார்.

தன் சொந்த மூத்த மருமகனான பரமேஸ்வரன், சொந்த மூத்த மருமகளாக நகுலேஸ்வரி, கலாவல்லி, அம்பிகா, மனோ, பாலகணேசமூர்த்தி, சுசீலா, சுசிலாவதி, யோகேஸ்வரி, ஆகிய மருமக்களையும் மக்கள் மருமக்களின் இல்லற வாழ்க்கைவின் பயனாய் 24 பேரக்குழந்தைகளையும், 26 பூட்டப்பிள்ளைகளையும், கண்டு இல்லறம் எனும் விருட்சத்தின் நிழலாய் எப்போதும் வாழ்ந்து காட்டிய பெருமாட்டி. நற்குணங்களையும் பொருளாதார வளங்களையும் எமக்கு அள்ளித் தந்த தாயே.

திருவிழாக் காலங்களில் வந்தோரை வரவேற்று உபசரிப்பது மட்டுமல்ல, பன்றித்தலைச்சி அம்மன் திருவிழாவின்போது தண்ணீர்ப்பந்தல் வைத்து மோர் வழங்கி தாகசாந்தி செய்பவர்களும், உயர்வு – தாழ்வு, உற்றம் – சுற்றம், சாதி – பேதம், இரவு பகல் பாராது அன்புதான் இன்ப ஊற்றென்று அனைவருக்கும் ஒளி கொடுத்த தம்பதியினரே! தங்களுக்கு சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவிலில் வாழ்ந்த ஓர் ஆசிரியர், உப அதிபராக கற்பித்தல் சேவையாற்றியமை.

ஈழத்தின் கல்வி வரலாற்றில் வட இலங்கையில் கல்விச் சேவையின் பங்களிப்பு மெச்ச வேண்டிய விடயமாகும். ஏனெனில் தமிழில் மேம்பட வேண்டும் என்ற ஆசையும், ஆற்றலும் நிறைந்த எண்ணற்ற மாணவர்களை நெறிப்படுத்த பல வழிகளில் அரும்பாடுபட்டு உழைத்து நன்மதிப்பைச் சம்பாதித்துக் கொண்ட கலாவித்தகி திருமதி. தம்பிரத்தினம் நாகம்மை.

இவர் 1949ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியதரப் பரீட்சையில் முதன்மைச் சித்தியடைந்து அனுராதபுரம் மாவட்டத்தில் மருதங்கடவெல முஸ்லிம கல்லூரியில தனது அளப்பரிய ஆசிரியப்பயிற்சி சேவையை ஒரு வருடம் ஆற்றியவர். அக்காலத்திலேயே சிங்களம் அத்துப்படி. பின்னர் நிரந்தர பதவியாக முப்பத்தைந்து வருடங்கள் (35) யாழ்/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் ஆசிரியராக, உபஅதிபராக, சேவையாற்றி ஓய்வு பெற்றவர். பின்னர் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற விளையாட்டுப்போட்டி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திருவாளர் அ. தம்பிரத்தினம் கலந்து கொண்ட போது விளையாட்டு மைதானத்திற்கு இடமில்லை என்று கூறிய பொழுது "எள்ளு, சணல் விதைத்து சோலையாக இருந்த காணியைத் தல்லாம் என்று இரத்தினப்பரியாரியார் கூறிய பொழுது மாணவர்கள் அவரைத் தூக்கிக்கொண்டு அவர் வழங்கிய மைதானக் காணியைச்சுற்றி வந்தனர். உடனேயே உறுதி எழுதி பாடசாலை மைதானத்திற்கு காணி வழங்கினர்.

அத்துடன், கல்வியின் முன்னாயத்த நடவடிக்கையாக தரம் ஒன்று தொடக்கம் 10 தரப்பரீட்சை வரையான தமிழ் பரீட்சைகளிற்கான வினாப் பத்திரம் தயாரித்தல், பரீட்சை ஒழுங்கமைத்தல் போன்ற செயற்பாட்டை செவ்வனே செய்தவர். பரீட்சையின் பரிசோதகராகவும், மாணவர்களுக்கான கருத்தரங்குகளின் விரிவுரையாளராகவும் நீண்டகாலமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றியவர், கடமையுணர்வுடன் தனது உடல் நிலையைக் கூடப் பொருட்படுத்தாது கண்ணிய சிந்தனையுடன் நிறைவேற்றிய வித்தகி. அது மட்டுமல்லாது நாடகம், நாட்டிய இசைநாடகம், நடனம், இசையும்கதையும் என்பவனவற்றை மாணவர்களுக்கு பயிற்சியளித்து, தனது முயற்சியால் அரங்கேற்றியவர். அதில் பிரதேச மட்ட, மாவட்ட மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்டத்தில் மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் பெற்றுக் கொடுத்தது மட்டுமன்றி பாடசாலைக்கே பெருமை சேர்த்தவர். யாழ்/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நடைபெறும் தமிழ் பேச்சுப் போட்டி, சமய அறிவுப் போட்டி, சமையற்கலை முதலுதவி , அருந்ததி இல்ல அலங்காரம், விளையாட்டுப் போட்டிகளிற்கு இல்லத் தலைவியாகக் பங்குகொண்டார்.

அத்துடன் அவர் கற்பித்த பாடசாலையிலே தனது கணவருக்குரிய சமாதான நீதவான் பட்டமளிப்பு விழாவினை 1979ஆம் ஆண்டு வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

மாணவர்களுக்குப் பல வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற நோக்கோடு தமது குல தெய்வமாம் காத்தவராயர், வீரபத்திரர் ஆலயங்களில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையிலும், மார்கழி திருவெம்பாவை பஜனையிலும் , திருவிழாக் காலங்களில் தேவாரம் ஓதுவதறகும் வாய்ப்பளித்தனர். இது வழக்கமாக மாறியது. மட்டுவில் மருதடிப் பிள்ளையார் தும்பிக்கையை தனது கையிலும் (நம்பிக்கை) தலையிலும் (ஆசீர்வாதம்) பெற்று மகோற்சவத் திருவிழா, சரஸ்வதி பூசை, பிள்ளையார் பெருங்கதை மட்டுமல்லாமல் சகல வழிபாடுகளையும் செய்த உளம் கவர்ந்த ஆசான்.

நீத்தார் நினைவாக விழா எடுப்பது இயல்பு.

தனது வாழ்வினை இவ்வுலகிற்கு அர்ப்பணித்தார். பல ஆண்டுகள்(36) ஆசிரியத் தொழிலினை மிகவும் சிறப்பாக செய்து பல மாணவர்களை மட்டுவிலில் உருவாக்கிய பெருமைக்குரியவராக விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு, பண்பு, பொறுமை, இரக்கம், நேர்மை போன்ற பண்புகள் நிறைந்தவர். எவ் வேலையினையும் "ஓம் என ஒப்புக்கொண்டால், என்ன இடையூறுகள் வந்தாலும் திடமாக நடாத்தும் ஆற்றல் கொண்டவர். மேலும், இவர் பிறப்பு முதல் இறப்பு வரை தன்னையும் தனது குடும்பத்தையும் பார்ப்பது மட்டுமல்ல பொது நிகழ்வுகளுக்கு தன்னாலான உதவிகளை வழங்கியுள்ளார்.

வழங்கப்பட்ட பட்டங்களும் கௌரவங்களும்

யாழ்/மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நிறுவுநர் தினமும் பரிசில் நாளும் 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் 25ஆம் திகதியன்று விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கௌரவிக்கப்பட்டார்.

நல்லூர் தெற்கு, செட்டித்தெரு வீட்டில் தனது இளைய மகள் குடும்பத்துடன் தங்கியிருந்த வேளை சிரேஸ்ட பிரஜைகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் 29.11.2014ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஸ்ரீதுர்கா மணிமண்டபத்தில் கௌரவிக்கப்பட்டார்.

நேர்மைத்திறனும், கண்ணியமும் கொண்ட ஓர் அற்புத மாமணி இவர், இவரின் பணிகளை எண்ணி நெகிழ்கின்றது நெஞ்சம். பிறர் மனம் நோகா வார்த்தையும் என்றென்றும் உண்மையை உரைப்பதற்கும், உள்ளதைச் சொல்வதற்கும் தயங்காத பண்பினள். கண்கண்டால் கை செய்யும் ஜாலத்தில் இன்றைய காலச் சூழலிற்கு ஏற்றவகையில் ஆக்கபூர்வ செயற்பாடுகள், வெளியீடுகள் படைப்பதில் வல்லவர்.

யாழ்/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நிறுவுநர் தினமும் பரிசில் நாளும் விழாவிற்கும்/வம்சத்தையும் (பழைய மாணவர்கள்) ஈடுபாடாக்கியுள்ளார்கள். இதனால் பாடசாலை பெரும் புளகாங்கிதம் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக் காலம்

தம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளைக் கூட சீராட்டி, பாராட்டி வளர்த்து கல்வியிலும் ஏனைய தொழில் துறைகளிலும் நிலைகொள்ளச் செய்து "இப்படித்தான் வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டிய சீமாட்டி. 1999இல் தன் கணவரின் இழப்பின் பின்னர் சற்று நிலை தளர்ந்தாலும் மீண்டும் தற்துணிவுடன் தன் இளைய மகளுடன் வாழ்ந்து 2016ஆம் ஆண்டில் காலில் ஏற்பட்ட முறிவினால் சிறிது காலம் சிகிச்சை பெற்று, பின்னர் மூத்த மகளின் இல்லத்தில் (வட்டக்கச்சி) இன்பமாய் வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு ஆண்டும் தனது பிறந்த நாளை பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் மட்டுமன்றி தன் சுற்றத்தார், அயலவர்களுடன் கூடிக் கொண்டாடி மகிழ்வார்.

2021ஆம் ஆண்டு வயது மூப்பினால் எழுந்து, நடந்து தன் செயற்பாடுகளைச் செய்ய முடியாத நிலையிலும் தேவாரங்கள் பாடிய வண்ணமும் தம் உறவுகளுடன் தொலைபேசியிலும் நேரிலும் தெளிவாக உரையாடியும் பழைய வாழ்க்கைக் குறிப்புக்களை மீட்டிப்பார்த்து எல்லோரையும் மகிழ்வித்தும் மூத்தமகள் மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கூடி நிற்க தனது 97ஆவது வயதில் இவ்வுலக வாழ்வைத் நீத்து 09.06.2021 அமாவாசைத் திதியில் மருதடி விநாயகர் தாள் சரண் புகுந்தார்.

சுபம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிரத்தினம் நாகம்மை மண இணையரின் மட்டுவில் மண்ணின் பயணங்கள்

1. மட்டுவில் மண்ணில்

பூவுலகில் மட்டுவில் பதி இயற்கையின் படைப்பாலும், அருளாட்சி ஆலயங்களாலும், பெரியோர்களினாலும் பெருமை கொள்கின்றது. மட்டுவில் பதியின் பெருமைக்கு வித்திட்ட அணிகலனாய்த் திகழ்ந்த பெரியோர்கள் வரிசையில் வைத்தியத்துறையிலும், ஆசிரியப்பணியிலும் அரும் பெரும் பணியாற்றிய தம்பிரத்தினம் நாகம்மை குடும்பத்தினர் – சமய, சமூகப் பணிகளை பதிவிட முனைகின்றேன்.

2. நல்லதோர் குடும்பம்

'நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்' தம்பிரத்தினம் நாகம்மை தம்பதியினரின் குடும்பம் பரம்பரையில் தம் குலத்து பெருமைகளைக் காத்து " அறம் இயற்றி வாழ்ந்து வருகின்றனர். பெற்றோர் செய்த பணி – பிள்ளைகளின் வாழ்வில் வெளிப்படும். இவர்கள் தம்பணியைச் சிறப்பாக மேற்கொண்டதன் விளைவாக இவர்களுடைய பிள்ளைகள் இன்று சமூகத்திலே பெயர் சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். தந்தையின் பரம்பரையைக் கைவிடாது மருத்துவப்பணியை முன்னெடுக்கும் Dr. சித்திராதேவி பரமேஸ்வரன் அவர்களின் பணி பரியாரியார் பரம்பரையைப் பேசு பொருளாக்கியது என்றால் மிகையாகாது. அமரரின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்தால் குடும்ப விருட்சத்தின் பரிணமிப்பும் நிழலும் குடும்பத்தின் பெருமையை வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இன்று போல் என்றும் இக்குடும்பம் மருதடியான் அருள் நிறைவாக வாழ வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வைத்திய சேவை

எம்மவர், எமது ஊரார், அயலார், உறவினர், சுற்றத்தவர், அப்பு, தம்பி, மோனை, ராசா, பிள்ளைகள் என்ற அன்புமொழியோடு எமது பிரதேசத்து வைத்தியராகி திகழ்ந்தவர். Dr. தம்பிரத்தினம் பரியாரியார் நாம் சிறுவயதில் படிக்கும் போது டாக்டர் என்றால் "கோட், சூட், ரை, ஸ்ரெதஸ்கோப் என்பன அவரின் அடையாளமாகக் கண்டோம். அத்தனையும் தவிடுபொடியாக்கி சாதாரணமாய் எமது சமூகத்தில் வாழ்ந்தவர். வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, சில பல வேளைகளில் வேட்டியும் சால்வையுடனும் எமது பிரதேசத்தில் நடமாடிய காவல் தெய்வம். பரியாரியார் தம்பிரத்தினம் எனும் நாமம் கொண்ட பெருமனிதன். குழந்தை வைத்தியம் முதல் முதுமையில் இயற்கை மரணத்தில் இறுதி கைவைத்தியம், நாடிபார்த்தல் அத்தனையும் இவரின் பிரசன்னமே. இறைவனிடம் பயணிப்போருக்கு இறுதி விடைக்கொடுத்து அனுப்பியவர் இவரே.....! இன்று முதுமை..... அனுபவம்..... கைநாடிபார்த்தல்..... அத்தனைக்கும் நாம்படும் சிரமங்களின் போது அன்னாரை நாம் தினம் தினம் நினைக்க வைக்கும்.

யுத்த காலத்தில் ஊரடங்கு வேளையில் நடுராத்திரியில் துவண்ட உள்ளங்களுக்கு உடனடியாக வைத்திய சேவையை வழங்கிய பெருமைக்கு உரியவர் தம்பிரத்தினம் பரியாரியார்.

எந்த வேளையில் எவர் சென்று அழைத்தாலும் அவர்களை அன்பு மொழி பாராட்டி அழைத்து அவர்களின் வைத்திய தேவைகளை உடனடியாக நிறைவு செய்ய ஆலோசனை வழிகாட்டல், வைத்தியம் பார்த்த பெருமகனார் தம்பிரத்தினம் பரியாரியார்.

4. மைதான வைத்தியர்

பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் மைதான வைத்தியர் எனும் பதவியை அலங்கரித்தவர் Dr. அ. தம்பிரத்தினம் அவர்கள். பாடசாலை விளையாட்டுப் போட்டியில் ஆரம்பம் முதல் இறுதி வரை அவ்விடத்தில் பிரசன்னமாக இருந்து எவ்வித அச்சமும் இன்றி மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் நிகழ்வில் பங்குகொள்ள காவலனாய்க் காத்திருந்த பெருமகனார். மேலும் பாடசாலை நேரத்தில் ஏற்படும் திடீர் சுகவீனங்களுக்கு வைத்திய ஆலோசனை வழங்கிய உத்தமர். எத்தருணத்திலும் தன்னுடைய பணிகளை உடனே நிறுத்தி, அழைத்தவரின் தேவையை நிறைவேற்றிய பெருமகனார் தம்பிரத்தினப் பரியாரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தாகசாந்தி

மட்டுவிலின் பெருமைக்கு அணிகலன் மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவில். பங்குனி மாதம் பிறந்தால் அம்மனை நினைக்காத சைவர்கள் உலகில் யாருளர்? என்றால் மிகையாகாது. அம்மனை வழிபட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பல்லாயிரம் வேண்டுதல்களுடன் பல்வேறுபட்ட இடங்களில் இருந்து கொளுத்தும் வெயிலில் வருவார்கள். ஆலயம் வரும் பிரதான வீதியில் அவர்களின் இல்லம் இருப்பதால் பக்தர்களின் தாகம் தீர்ப்பதற்கு வீட்டு வாயிலில் தாகசாந்தி நிலையம் அமைத்து அத்தனை பங்குனித் திங்களும் மோர் – சர்க்கரைத்தண்ணீர் குளிர்பானம் இணைத்து வார்ப்பார்கள். இப்பணி இன்றும் நிலைத்திருப்பது குடும்பத்தின் தொடர் பணியை எடுத்துக்காட்டுகின்றது. நானும் என் நண்பர்களும் ஏன் பாடசாலை ஆசிரியர்களும் கூட இடைவேளை நேரம், பாடசாலை விட்டு வரும்போது இப்பந்தலில் ஒருபிடி பிடித்ததையும், வயிறு ஆறியதையும் மறக்க முடியாது.

6. காக்கைக்கு உணவு

பெற்ற தாய் தந்தையரை பிள்ளைகள் வேளைக்கு உரிய உணவைக் கொடுத்து பராமரிக்கத் தயங்கும் இக்காலத்தில் இச்செய்தி பலரை மெய்சிலிர்க்க வைக்கும். காகத்திற்கு உணவு விரத நாளிலேயே வைக்கும் வழமை இன்றும் உள்ளது. ஆனால் தம்பிரத்தினம் நாகம்மை குடும்பத்தினர் தினந்தோறும் காக்கையைக் கூவி அழைத்து உணவு கொடுப்பார்கள் என்று சொல்வதை விடுத்து உணவு ஊட்டுவார்கள் என்று சொல்வதே பொருத்தமுடையது. செல்விருந்தோம்பி வருவிருந்துக்காய்..... காத்திருப்பதில் பெருமை கொண்டவர் தம்பிரத்தினம் குடும்பத்தினர்.

நான் சிறுவயதில் பாடசாலை போகும் போது அமரர் தம்பிரத்தினம் அவர்களின் தோளில், கையில், தலையில் அமர்ந்திருக்கும் காக்கை காகா.. என கூவி அழைத்து வரும் அத்தனை காக்கைகளுக்கும் அன்னம் கொடுப்பதை நாங்கள் சகபாடிகளோடு பார்த்து மகிழ்வோம். வறுமையுள்ள போர்காலத்திலும் அன்னவர் தன் இறுதிக்காலம் வரை தம்பணியை முன்னெடுத்த பெருமையை பதிவிடுவதில் மகிழ்வடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சமாதான நீதவான்

சத்தியக் கூற்று முதலான கடிதங்களுக்கு ஒரு சமாதான நீதவானின் கையொப்பத்திற்கு இன்று எமது பிரதேசம் சார்ந்தவர்கள் பலரை விசாரித்து அலைவது போன்று அன்று யாரும் அலையாது தம் தேவையை நிறைவேற்றிக் கொள்ள தம்பிரத்தினம் J.P எமது பிரதேசத்தில இருந்து தம்பணியை பெருமை கொள்ளாது பெருமனதோடு ஆற்றினார்.

1979ஆம் ஆண்டு சமாதான நீதவான் கௌரவம் கிடைத்த போது எமது பிரதேச மக்கள் பெருமனதோடு வரவேற்று யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் வரவேற்பு விழா நடைபெற்றதை அறியமுடிகின்றது. அக்கால மக்கள் சமாதான நீதவான் தம்பிரத்தினத்தின் கனதியை ஏற்று எடுத்த விழாவாக அது அமைந்ததை சொல்லக் கேள்வியுற்றேன்.

8. விளையாட்டு மைதானம்

யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் வருடாந்த விளையாட்டுப் போட்டி 90க்கு முன்னர் நடைபெற்றது அரிது. சொந்த விளையாட்டு மைதானம் இல்லை. எனினும் 1993ஆம் ஆண்டு இக் குறைப்பாடு நீங்கியது.

அக்காலத்து மட்டுவில் கொத்தணி அதிபர் உயர்திரு. அ.பொ.செல்லையா அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட விளையாட்டு விழாவில் Dr.அ. தம்பிரத்தினம் மைதான வைத்தியராகக் கலந்து கொண்டார். அவ்விழாவில் முதன்மை விருந்தினர் ஆற்றிய உரையின் பயனாக உடனடியாக சிறுதொகை அன்பளிப்போடு மைதானத்திற்கான காணியை அன்பளிப்புச் செய்வதாக ஒப்புதல் வழங்கினார். சிறுதொகை அன்பளிப்பு எதிர்பார்ப்பு தன்னுடைய மாற்றுத்திறனாளியின் வாழ்விற்கே என்று வெளிப்படுத்தி உரையாற்றி விளையாட்டு மைதானத்தின் உருவாக்கத்திற்கு நிலத்தைப் பெருமனதோடு அன்பளிப்பு செய்தார். அச்சந்தர்ப்பத்தில் நானும் சபையில் மாணவனாய் இருந்து கண்ணுற்றேன் என்பதால் மகிழ்வடைகின்றேன். பாடசாலைச் சமூகம் சார்பாக மனநிறைவான நன்றிகளை இச்சந்தர்ப்பத்திலும் பகிர்ந்து கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பரிசில் நாள்

யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் 2000ஆம் ஆண்டின் பின்னரே பரிசில் நாள் வருடாவருடம் நடைபெற்று வந்தது. இப்போது சில காலம் பரிசில் நாள் நடைபெறாமை மனவேதனைக்குரியது. யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலய பழையமாணவர் சங்கத்தின் அனுசரணையில் நடைபெற்ற பரிசில் நாளை முன்னெடுக்க கனடா நாட்டில் எமது பழையமாணவர்களை ஒன்றிணைத்து அவர்களின் ஒத்துழைப்புடன் பரிசில் நாளை நாம் சிறப்பாக முன்னெடுக்க எமக்கு உதவியவர் திரு. த. உருத்தினன் அவர்களே. மேலும் நாகம்மை ஆசிரியர் கௌரவ விருந்தினராகவும். திருமதி சுனேந்திரா சுதாகர், Dr. சித்ராதேவி பரமேஸ்வரன் ஆகியோர் பிரதம விருந்தினராக சபையை அலங்கரித்து விழாவைச் சிறப்பித்தனர். திருமதி சுனேந்திரா சுதாகர் அவர்கள் பரிசில் நாள் அன்பளிப்பாக ஒரு தொகை நிதியினை பழையமாணவர் சங்கத்திற்கு அன்பளிப்பு செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

10. குலதெய்வ வழிப்பாடு

அமரர்கள் தம்பிரத்தினம் நாகம்மை குடும்பத்தினர் தம்முடைய வீட்டிலே காத்தவராயரையும், அயலிலே வீரபத்திரரையும் தம் குடும்ப குல தெய்வமாக சிறு ஆலயம் அமைத்து வழிபடுகின்றனர். மேலும் மட்டுவில் தான்தோன்றிப் பிள்ளையார் ஆலயத்திலும் நித்திய வழிப்பாட்டை மேற்கொண்டவர்கள். மருதடிப் பிள்ளையார் கோயிலும் தம்பிரத்தினம் குடும்பத்தினரின் உபயமாக நவராத்திரி, சதுர்த்தி உற்சவம் இருக்கின்றது. இவ்வுபயம் நீண்ட காலம் இவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் வருடாந்த அலங்கார உற்சவத்தில் முதலாவது திருவிழாவை திரு. த. உருத்திரன் அவர்கள் உபயமாக செய்தார். இப்போது மகோற்சவ உற்சவமாக மாறிய பிற்பாடு 2019ஆம் ஆண்டில் இருந்து " கணபதி ஓமம் தம்பிரத்தினம் குடும்பத்தின் உபயமாக இடம்பெறுகின்றது. பிள்ளையார் கதையின் பெருங்கதையில் நாகம்மை ரீச்சர் அந்நாளில் பிள்ளையாருக்கு வேண்டிய பலகாரம், உணவுகள் படைத்து கதை படிப்பில் ஈடுபடுவார்கள். இப்போது இவர்களுடைய உபயமாக மருதடியில் பெருங்கதை உபயம் இடம்பெறுகின்றது. இத்தகைய தொடர்புடைய குடும்பம் என்று மருதடியான் அருளால் மகிழ்வுற்று வாழ மருதடியானை வேண்டிப்பிராத்திக்கின்றேன். நாகம்மை ஆசிரியர் சென்ற ஆண்டு வரை தமது உபயங்களில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஆசிரியப்பணி

" எழுத்து அறிவித்தவன் இறைவன் எனக்கு எழுத்து அறிவித்த தெய்வம் நாகம்மை ரீச்சர். " மரத்தை மறைத்தது மாமத யானை – மரத்தில் மறைந்தது மாமத யானை "கல்லைக் கண்டால் நாயைக் காணோம் நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்பர். நாகம்மையை ஆசிரியராகப் பார்த்தால் தாய்மை மறையும். தாயாகப் பார்த்தால் ஆசிரியராகத் தெரியமாட்டார். நெற்றியில் திலகம், அழகான கொண்டை, வண்ணச் சேலை அழகு, சிரித்த முகம், அன்பு மொழி, அப்பு, ராசா, மோனை, பிள்ளை, தம்பி எனும் பாச மொழிகளை பேசும் நல்லாசான். யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் ஏறக்குறைய 36 ஆண்டுகள் ஆசிரியராக, உப அதிபராக பணியாற்றி பாடசாலையின் உயர்விற்கு வித்திட்ட வித்தகி. ஆசிரிய மணி வே. சுப்பையா முதல் பல்வேறுபட்ட அதிபர்களுடன் பணியாற்றியவர். திரு. செல்லையா, திரு. இ. குழந்தைவேலு அதிபர்களின் காலத்தில், பிரதி அதிபர் பதவியை அலங்கரித்தவர். யுத்த காலத்தில், அனர்த்த காலத்தில் தாயாக இருந்து பிள்ளைகளைக் காத்த தாய் நாகம்மை. இன்று எமது சமூகம் சார்ந்த அத்தனை பேரும் அன்னையிடம் ஆரம்ப வகுப்பில் கற்றவர்களே. பலர் இவரிடம் ஏடு எழுதியிருப்பார்கள், சில சமயம் தாய் பிள்ளைகளே இவரிடம் கற்றும் இருப்பார்கள். இவரின் வளர்ப்பில் அடித்தளம் இடப்பட்ட நானும் இன்று இவரின் நினைவு மலருக்கு ஆக்கம் கொடுப்பதில் மகிழ்வடைகின்றேன். இவரின் தன்நலம் கருதாப்பணியே நீண்ட ஆயுளுக்கும் பிள்ளைகளின் உயர்வுக்கும் வித்திட்டது என்றால் மிகையாகாது.

12. நிறைவு

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

எனும் வள்ளுவர் கூற்றுக்கு இணங்க தோன்றிப் பணிகள் பல செய்து பெருமையுடனும் புகழுடனும் வாழ்ந்த எனது ஆசான் நாகம்மை அவர்கள் தம் முதுமைக் காலத்தில் எமது ஊரில் இல்லாமையும் அவரின் இறுதிக்கிரியை எமது மண்ணில் நிகழாமையும் வேதனைக்குரியது. மட்டுவில் மண்ணின் பல உள்ளங்களில் தாயாகக் கொலுவிருக்கும் அன்னை நிச்சயமாக மருதடியான் பாதார விந்தங்களில் சாந்தித்தியம் பெறுவர்.

அவரின் ஆசி அவர் குடும்பம் உயர்விற்கு எப்போதும் கிடைக்கும். மருதடியான் அருள் நிறைவாகக் கிடைக்க பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

– சுபம் –

சிவகாந்தன்
மட்டுவில் மண்ணின் மைந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால நினைவுகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா... எங்கள் அம்பாள்

கோயில் தெய்வமாய் என் கண்முன்னே எப்போதும் இருக்கும் போது எனக்கென்ன மனக்கவலை. தினம் தினமும் எங்கள் அல்லல்களை விரட்டி எமக்கெல்லாம் வல்லமையைக் காட்டியே வளர்த்தெடுத்து வளம் பெறச் செய்த அன்னையே!

கல்வியின் அன்னை, செல்வத்தின் திருமகள், வீரத்தின் தாய் மூன்றும் சேர்ந்த எங்கள் அன்புத் தாயே! தெய்வமாகி புவனம் முழுவதும் காப்பதுபோல தாயின் வடிவாகி எம்மைக் காத்த அன்னையே!

என்னை மூத்த செல்வம், பொன்குஞ்சு எனப் போற்றி என் அன்புத் தெய்வமாய் ஐயாவுடன் எம் ஆயுள் வேத பரம்பரையைக் காக்க வந்த சீமாட்டியே! நீ தான் என சீர்தூக்கிச் சிறந்ததோர் ஆயுள்வேத வைத்தியராக என்னைப் பார்த்து இருவரும் மனம் மகிழ்ந்தீர்களே அம்மா! என் அன்புப் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டி அவர்களுக்கு வேண்டிய நேரத்தில் வேண்டியதெல்லாம் செய்து அழகு பார்த்தீர்களம்மா. என் பேரப்பிள்ளைகளையும் உங்கள் நிழலில் வளர்த்தெடுத்ததில் மனம் மகிழ்கின்றேன் அன்னையே!

அம்மா உங்களின் வேகம் முற்றும் உணர்ந்து முந்திச் செய்யும் துரிதம் எனக்கு இல்லையம்மா. தாயை இழந்த கன்றாகி தவித்துக் கதறுகின்றேன் அம்மா. அம்மா! உங்களது இறுதி வாழ்க்கைப் பயணத்தில் உங்களுடன் சேர்ந்து பயணித்து என்னால் இயன்றவரை உங்களை அரவணைத்து உணவூட்டி, மருந்து தந்து நீங்கள் எமக்கு ஊட்டி வளர்த்ததில் ஓர் சிறு துளி நானும் உங்களது மருமகனாகிய ஈஸ்வராவும் பெருமை கொண்டு அத்தனை இறைவனுக்கு கோடான கோடி வணக்கங்கள.

உங்கள் பிரிவால் வாடும்
மகள்
பரமேஸ்வரன்,
சித்திராதேவி,
வட்டக்கச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்றென்றும் அன்புத் தெய்வமாம் எம் தாயின் பாதார விந்தங்களுக்கு இம்மடல் சமர்ப்பணம்"

எம்மை ஈன்று சுமந்த அம்மாவின் தடம் பதித்த (அன்பு, பொறுமை, தர்மம்) பயணம்.

எமக்கெல்லாம் மாதா, பிதா, குரு, தெய்வமாயிருந்து அளவில்லா அன்பைச் சொரிந்து, அறிவுத் தாகத்தையும் பொறுமை எனும் அணிகலனையும் நிறைத்து வையத்தில் வாழ்வாங்கு வாழும் வழி காட்டி இன்று விண்ணகம் சென்றுவிட்ட எம் அன்புத்தாயின் திருப்பாத கமலங்கட்கு அகமது நன்றி பொங்கும் இதய பூர்வமான காணிக்கை.

அன்புப் பெற்றோர்களின் எண்ணம்தனை நிறைவேற்ற பல இன்னல்களுக்கு மத்தியிலும் தன் கல்விக்கு முன்னுரிமை கொடுத்து உலகின் முதன்மையான கல்வியெனும் பெரும் செல்வத்தைப் புகட்டும் ஆசானாக கடமைதனை ஏற்றீர்களே!

தம் அன்பு பெற்றோர்க்கு பின் தம் சகோதர சகோதரிகட்கு ஆறுதல் கொடுக்கும் விருட்சமானீர்களே! புகுந்த இடம்தனில், தம் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என நின்றுவிடாது, உற்றார், உறவினர், உழவர் அவர்தம் கல்லூரிக்கும் தங்கள் இயல்பான குணாதிசயங்களால் சிறந்த இல்லத்தரசியாகவும் மிகச்சிறந்த உதாரணபுருஷராக திகழ்ந்த செங்கதிரே!

துரதிஷ்ட வசமாக மூமைந்தர்களை இழக்கின்ற போதும் சகிப்புத் தாயாகத் துலங்கி நிலமாதாவையும் சகிப்பில் விஞ்சி நின்றீர்களே! எண்ணில் அடங்கா உம் சாதனைகளை பட்டியல் இட்டே செல்லலாம். நம் வீரத்தாயே! வஞ்சகத்தைச் சிறிதேனும் எண்ணாத கோவிலே!

நாம் ஏதும் குறையேதும் விட்டோமாயின்.....தம் அன்பால் அருட்கடவை செய்துவிடும்.பிறவிப்பெரும் கடல் தனை தத்துவரீதியில் நீந்தி சிவன் பாதம்தனை அடைந்துவிட்ட நீவிர் எம்மனங்களிலும், இல்லங்களிலும் நீரூழி மிளிர்ந்திடுவீர்!!!! இறைபாதம் சேர்ந்த வல்லவளை என்றென்றும் இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பேரன்பு மகன் ருத்திரன்
கலாவல்லி - மருமகள்
பேரப்பிள்ளைகள் - யாழினி கிருஷ்ணி
யாழினி கணவர் மனோகரன்
பூட்டப் பிள்ளை - அர்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா, இந்தியா பயணத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சும் நெஞ்சம் ஆற.....

தந்தையார் போயினர்
தாயாரும்போயினர்
தாமும்போவார்
கொந்தவேல் கொண்டொரு
கூற்றத்தார் பார்க்கிறார்
கொண்டுபோவார்
எந்த நாள் வாழ்வதற்கே
மனம் வைத்தியால்
ஏழை நெஞ்சே!
அந்தணாரூர் தொழ
துய்யலா மையல் கொண்டு
அஞ்சல் நெஞ்சே.

என் அம்மாவிற்கு
நான் எழுதும் மடல்...

அம்மா !
உங்களை நாங்கள்
இனி எப்போ காண்போம்?
பத்து மாதம் சுமந்து
பகல் இரவாய்
நீங்கள் பட்ட துயரும் மறந்து
எங்களை ஒரு குறையுமின்றி
வளர்த்தீர்கள்.

என் இளமைக் காலத்தை
பின்னோக்கிப் பார்க்கின்றேன்.
பத்துப் பிள்ளைகளையும் பெற்றீர்கள்.
உணர்வோடு உணவையும்
அறிவையும் ஊட்டினீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையல் செய்யும் வேளையிலும்
உங்கள் கற்பித்தல் முறைக்கு ஈடாகாது.
தந்தையின் கண்டிப்பான வழிகாட்டல் எல்லாம்
எங்களுடைய வாழ்க்கையை
சுலபமாக பயணிக்க வைக்கிறது.

எனது தந்தையார்
பண்பான பெரியண்ணா
எனது பாசமிகு மோகனண்ணா
எனது தம்பி ஆனந்து
என்னையும்
என் பிள்ளைகளையும்
அனாதரவாக விட்டுச்சென்ற
என் கணவர்

இவர்களையெல்லாம்
வழியனுப்பிவிட்டு
நீங்களும் அவர்களுடன்
எங்களைத் தனியாக
தவிக்கவிட்டுச் சென்று விட்டீர்கள்.

உங்கள் யாபேருக்கும்
இறைவன் ஆத்மசாந்தி வழங்கட்டும்

- அன்பு மகள்
பாலகணேசமூர்த்தி இந்திரகுமாரி
பேரன் தர்சன், தனுசன், றொசேல்,
பூட்டன் **Majoyes Kingston**
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனின் புலம்பல்

அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்த தெய்வமே!
பண்புடைமை காத்து
பக்குவமாய் வழி நடந்த தாயே!

இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பல செய்தவரே!
எல்லோருக்கும் நல்லவராகவும்
நாணயமாகவும் நடந்தீரம்மா!

என் அம்மாவே!
துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக்கரமாய்
அடைக்கலம் கொடுத்த உங்களை
ஆண்டவன் ஏனழைத்தானோ?

இறைவன் சித்தம் என்றே,
என் அம்மாவின்
கண்கண்ட நினைவுகளை
நெஞ்சிலேந்தி
இங்கிருந்தே ஏங்கியழுகிறேன்..
மனக்கோயில் சாமி நீயம்மா!

- மகேந்திரன்(மகன்)
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தன் குடும்பம்

தாய் நிலத்து சீமையிலே
யாழ் இசையும் போதினிலே
தெய்வ அவதாரமாய் பிறப்பெடுத்த
எம் பெருங்குலத் தாயே!

விருட்சமாய் தழைத்தோங்கிய
நம்பெருங்குலம் நிலைத்தோங்க
அரும்பாடும் அர்ப்பணிப்பும் கொண்டு
நல்வழி காட்டிய ஆசானே!

அறிவுடன் பண்பும் உயர்வுடன்
ஒழுக்கமும் கொண்டு – நாம் வளம் பெற
அன்புக் கட்டளையிட்டுக் கற்றுத்தந்த
பல தலைமுறைகளின் குருவே!

ஆனந்தத்தைப் பெற்றெடுத்து ஆளாக்கி
எமக்களித்த பேரன்னையே!
குறையிலாது வாழ்வாங்கு வாழ்ந்து
இறையுள் உறைந்த எம் அப்பம்மாவே!

மருமகளை மகள் போல் பாராட்டி
உவகையுடன் அரவணைத்த அன்பு மாமியே!

நிகழவுள்ள இனிவரும் காலங்களில்
நம் நெஞ்சங்களில் உம்மை
நினைவுகளால் போற்றிக் கொள்வோம்!

நாளொரு பொழுதாய் ஏற்றிடும் தீபங்களில்
உம் திருமுகங் கண்டு நெகிழ்ந்து கொள்வோம்!

இறை திருவடியில் உங்கள் திருமுகம் சரண்புக

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

– ஆனந்தன்குடும்பம் –
சுசி (மருமகள்)
லிதர்சன், லிதர்சனா, லோஜனா,
பிறன்சிகா (பேரப்பிள்ளைகள்)
மட்டுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனின் புலம்பல்

அம்மா என்ற உறவு அற்புதமானது.
அன்புடன் தான் வளர்த்து
அறிவையும் பண்பையும் நிறைத்து.
வளமான வாழ்க்கையை உளமார வாழ்ந்திட
வாழவைத்த அன்புத் தெய்வமே!

என் அம்மா!
பூ உலகிலிருந்து விடை பெற்று
விண்ணுலகம் விரைந்தீர்களோ!?

நீங்கள் விடை பெற்றாலும் புத்திர, புதல்விகளின்
மனதை விட்டு அகலவே மாட்டீர்கள்!
எங்கள் மனமெல்லாம் தங்களின்
தங்கமான நல்வாசம் வீசிடும் அம்மா.

விரைந்து உங்கள் ஆத்மா
முன்னிலை எல்லாம் பெற்று
தில்லைக்கூத்தன் திருவடி அடைய
சிந்தையால் சிரம் தாழ்த்தி வேண்டுகிறோம்.!

- தனேந்திரன் (மகன்)
மட்டுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனின் புலம்பல்

கற்றுத் தந்தவள் நீ அம்மா.
பற்று வைத்தவளும் நீயம்மா.
இனிய தருணங்களை
எமதாக்கிய என் அம்மாவே!

இற்றுவிடா இனிய வாழ்வை
எமக்களித்த தகையே!
கண்கண்ட தெய்வம் அற்றுப் போனதேனோ?

வாழ்வாங்கு வாழ்ந்த எம் குலக்குடியின்
பெரும் தாய் நீயம்மா.
இன்று குதூகலிக்க நீயின்றி
உன் பிள்ளைகள் தவிக்கின்றோம் அம்மா!

நெஞ்சில் நேசத்துடனும் நீங்காத
நினைவுகளுடனும் ஏங்கி நிற்கும் எமக்கு
உன் ஆன்மா இறைவன் திருவடி அடைந்து
வரமளிக்க வேண்டி நிற்கின்றோம் அம்மா!

- சந்திரன்(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்ப்பாசத்திற்காக ஏங்கித்தவிக்கும் செல்லக்குட்டிகள்...

பத்தாவது பிள்ளையாக என்னைப்பெற்று பத்தினி என்ற பெருமையுடன் என் கண்கண்ட தெய்வமே! உங்கள் பாசத்திற்காக துடிக்கின்றேன். அம்மா

என் இதயக்கனியில் கனிந்துவிடும் தங்கள் அன்புக்கு நிகர் ஏதுமில்லை அதனை அளப்பதற்கு அளவுகோலுமில்லை.

எங்களை வளர்ப்பதற்கு செம்மையாக நல்ல கடின உழைப்பாளிகளாக தந்தையும் தாயும் செயற்பட்டு ஒவ்வொரு பிள்ளைகளையும் நல்ல நிலையில் உருவாக்கி பூமியில் வாழ நிலமும் கொடுத்து பொருளாதார வசதிகளும் வழங்கி வளப்படுத்தி சந்ததி உருவாக்கியவர்களே!

எல்லாப் பிள்ளைகளையும் மூன்று பிரிவாகப் பிரித்து சமையலறையில் வகுப்பெடுத்தல் நான்கு மணியிலிருந்து ஆறரை மணிவரை சமைத்துக் கொண்டு படிப்பித்தல். மற்றும் வயலில் தானியங்கள் அறுவடையின் போதும் மகாபாரதம் இராமாயணம் படிப்பித்தல். தந்தை தமிழ் – ஆங்கிலம் – சிங்களம் மும்மொழிகளிலும் எழுத்துக் கற்பித்தல்.

எல்லாப் பிள்ளைகளையும் சமத்துவமாக வளர்த்தாலும் கூட என்னில் பாசமும், பட்சமும், பராமரிப்பும், செல்லமும், செல்வமும், லக்சுமி கடாட்சமும், அன்புபபாலும் கூட என்றே சொல்லலாம்.

எனது கல்விக்கு யாழ்/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் விஜயதசமியில் ஏடு தொடக்கி இன்று பொருளியல் சிறப்புக்கலைமாணி – Master of arts Public Administration - Diploma in English - Computer License - Human Rights பட்டங்களுடன் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக நல்ல நிலையில் நல்ல துணைவரையும் – சுதாகர் தங்களை பாசமிகு மாமியாகவும் தன் தாயாகவும் போற்றி அன்பாக இருந்தார்.

அத்துடன் பேரனையும் தங்கள் மடியில் வைத்து வளர்த்து நல்லதொரு குடும்பமாக்கியவர்களே! அனோஜனின் அன்பு அம்மம்மாவே!

ஐயா தனது தோளிலும், தாய் தன் மடியிலும் கையிலும், அம்மாவின் தாவணியைப் பிடித்தபடி எல்லா நிகழ்வுகளிலும் திருவிழாக்களிலும் சுற்றுலாக்களிலும் கலந்து பல்வேறு அறிவுகளையும் பெற்றேன். சுனா அம்மா, சுனா ஆத்தா என்று செல்லமாக அழைப்பீர்கள். எல்லாவற்றிலும் முதற்தரமாக வரவேண்டும் என்ற எண்ணமும் அதிகாரிகள் எம்மை நல்வழிப்படுத்துவார்கள் என்று வழிகாட்டியவர்கள்.

"என் தாயின் அரவணைப்பிற்கு ஈடாக இப்பூமியில் ஒன்றுமில்லை.
பார்போற்றும் பிள்ளைகளை உருவாக்கிய தாயே!
அன்னைக்கு இது சமர்ப்பணம்."

சுனேத்திரா
சுதாகர்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயாவின் வாக்கு

சும்மாஇரு
எப்பவோ முடிந்த காரியம்
ஒரு பொல்லாப்புமில்லை
மலையே வந்தாலும் தலையே சும
சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்
கடவுளின் திசை தெரியாது
இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்
ஆனால் உள்ளத்தலுள்ள பெருங்கோவிலிலிருப்பான்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அக்கா உடன் பிறப்புக்களின் ஆதங்கம்

அன்பின் உறைவிடமாய்
எங்கள் உறவு வாழ்ந்தது.
அக்கா என்னையும்
தங்கை மீனாவையும்
வளர்த்து ஆளாக்கி வைத்தீர்களே!
சொந்தம் சுகமிழந்து
சோகம் வந்தது அக்கா
தங்கள் பிரிவால்
நித்திரையையும் இழந்து
எங்கள் இதயத்துடிப்பு
தங்களைத் தேடுதக்கா!

— ராணி மீனா —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்த்தியின் உள்ளத்திலிருந்து....!

அதிகாலை 04 மணிக்கு "அப்பு ராசாத்தி
அம்மாச்சி செல்லக்குட்டி" என எத்தனை
பெயர் சொல்லி கொஞ்சி என்னை எழுப்புவீர்களே!
அம்மம்மா.....

உலகத்தில் உள்ள அத்தனை தேவாரத்தையும்
தேங்காய் துருவித் துருவி சொல்லித்தருவீர்களே!
அம்மம்மா.....

தலைவாரி அழகுபடுத்தி
உணவூட்டி பாடசாலைக்கு
கையில் பிடித்து உங்களுடன்
கூட்டிச் செல்வீர்களே!
அம்மம்மா.....

இன்னும் எத்தனை எத்தனை நினைவுகள்
எழுதுவதற்கு
வார்த்தைகளைத் தேடுகின்றேன்
என்னால் முடியவில்லையே
அம்மம்மா.....

100வது பிறந்த நாளை உலகத்தில் உள்ள
அனைத்து உறவுகளுடனும் கொண்டாட
இருந்தோமே!
அம்மம்மா.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிவரை தொட்டுப்பார்க்கக்
கூட முடியாமல் போய்விட்தே!

அம்மம்மா.....

"உறுதியான பெண்மணி
பலமான பெண்மணி
துணிச்சலான பெண்மணி
ஆரோக்கியமான பெண்மணியாக
வலம் வந்தீர்களே!

அம்மம்மா.....

எங்களில் உங்களை போல
யாரும் இல்லையே

அம்மம்மா.....

இன்னும் இன்னும் தேடுகின்றேன்
அம்மம்மா உங்களது குரலையாவது
கேட்கமாட்டேனா என்று

அம்மம்மா.....

- ஜனனி-
அவுஸ்ரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஆசை அம்மம்மாவுக்கு கண்ணீர் பூக்கள்....!

என் அன்புத் தாயும் நீங்களே!
என் அன்பு அம்மம்மாவும் நீங்களே!
என் அன்புத் தெய்வமும் நீங்களே!
என் அன்பு ஆசானும் நீங்களே அம்மம்மா!

என்னை நொடிப் பொழுது
காணவில்லை என்றால்
ஏங்கி தேடித் தவிப்பவரும்
நீங்களே அம்மம்மா.
என் முகத்தில்
சிறு துளி வாட்டம் இருந்தால்
ஏங்கித் துடிதுடிப்பவளும்
நீங்களே அம்மம்மா

எனக்கு இனி யாரம்மா இருக்கின்றார்கள்?
எனக்கு நீங்கள் மட்டும் போதும் அமமா.
எனக்கு சிறு துன்பம் என்றாலும்
உங்கள் புன்சிரிப்பு காண
ஓடி வருவேனமமா
எல்லாத் துன்பங்களும்
பறந்தோடிவிடும் அமமா

"கண்ணை இமை காப்பதன் அர்த்தம்
நீங்கள் எமைக் காக்கும் போது
கண்டு கொண்டேன் அம்மா.
இறை பக்தியுடன் நற்பண்புகளையும்
சொல்லிச் சொல்லித் தந்து
எம்மை சீராட்டி பாராட்டி
வளர்த்தீர்கள் அம்மம்மா.
அம்மா வைத்தியசாலையிலே
நீங்கள் துடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நொடியும்
உங்களுடன் சேர்ந்து
நானும் துடித்தேனம்மா

அம்மா தாயே!
உங்களுடைய வாழ்க்கை இறுதிப் பயணத்தில்
உங்களுடன் வாழ்ந்த தேவதையாக
நான் உணர்கின்றேன் அம்மா.

அம்மா நான் உங்களது கடமைகள் செய்யும் போது
நீங்கள் துடிதுடித்ததை நான் அறிவேனம்மா.
"இவர்களை நான் வளர்தனான் தானே
பணிவிடை செய்தால் என்ன? என்று
ஏங்கும் இவ்வுலகில்
"என் ராசாத்தி, என் ஆரணாகுஞ்சு, இவை எல்லாம்
நீ செய்யவா? சற்று நேரத்தில் எழுந்து நடப்பேன
பின் எல்லா வேலைகளையும் நான் செய்வேன
நீ ஒன்றிலும் தொடவேண்டாம் செல்லமே!
என பதறினீர்களே அம்மா!

இறைவனடி சேரும் இறுதி வேளையிலும்
உங்களுக்கே உரிய நம்பிக்கை,
பொறுமை, வீரம், அன்பு, பாசம், கனிவு, துணிவு
இன்னும் இன்னும் எத்தனையோ நற்பண்புகளை
ஒரு வீரத்தாயாக
நிலை நாட்டினீர்கள் அம்மா!
உங்கள் பணிவிடை செய்த
பாக்கியசாலி நானம்மா!

"ஆரணிகுஞ்சு என்னை விட்டுப் பறந்து விடும,
பற்றி பிடித்து வைத்திருக்க வேண்டும்!
என்று சொல்லுவீர்களே அம்மம்மா!
இப்போது என்னை விட்டு
பறந்தோடி விட்டீர்களே அம்மா!
எங்கே நான் உங்களை தேடிப் பிடிப்பேனம்மா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பிள்ளைகளுக்கும்
இன்னும் பல மாணவர்களுக்கும்
எனக்கும் என் அன்பு சகோதரர்களுக்கும்
எம் பிள்ளைகளான
பூட்டக் குழந்தைகளுக்கும்
ஒரு சிறந்த ஆசானாக இருந்த
பெருமைக்குரியவர் நீங்கள் அம்மா

அம்மா தாயே!
"மருதடி, மருதடி.....
முருகண்டி, முருகண்டி.....
என ஒவ்வொரு நொடியும்
மனதில் வேண்டி
இரு கைகளையும் கூப்பிக் கொண்டு
இறைவனடி சேர்ந்தீர்கள் அம்மா!

அம்மா!
உங்களை நான்
இழந்து விட்டேன் என நம்பவில்லை
எல்லாம் கனவு போல் தெரிகிறது அம்மா.
அம்மா தாயே!
இன்னுமோர் பிறவி இருந்தால்
என் மகளாக
என் மடியில் நீங்கள் தவழ
என் ஆசை அம்மம்மாவிடமே
மண்டியிடுகின்றேன்.

நன்றி

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

– பேர்த்தி ஆரணி –
வட்டக்கச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மம்மா எங்கள் இதயத் தெய்வம்...!

பொய்ப்படப் புலர்ந்த
பூவுலக வாழ்வில்
மெய்ப்பட வாழ்ந்தவள் நீ

- அம்மம்மா

கற்பனை கடந்த
கனவுலகம் காணாமல்
மெய்ப்பட உந்தன்
மடி சாய்ந்து வாழ்ந்தோம்

- அம்மம்மா

தாயிடம் தேடாத பாசமும்
தந்தையிடம் பெறாத அன்பும்
இயற்கையிடம் பெறாத உறவும்
எல்லாமே உந்தன் வற்றாத பாசத்தில்
வரமாகப் பெற்றோம்.

-அம்மம்மா

கல்வித் தாயாக
கமலாசினியிடம் கலைமகளாய்
காத்து வந்த காலத்தில்
ஏட்டுக் கல்விதனை எமக்கு
எழுத்தாணியால் கற்பித்தாய்.
வாழும் வகைகளை - நீ
வார்த்தையினால் கற்பித்தாய்
செய்யும் தவறுகளை
முகக்குறியால் கண்டித்தாய்

- அம்மம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌவியமாய் நாம் பள்ளி செல்ல - நீ
பாசமுடன் எமை அனுப்பி வைப்பாய்
பள்ளி முடிந்தவுடன்
பசித்து வரும் வேளையிலே
துல்லியமாய் வேண்டியதை
சோறாகத் தந்திடுவாய்

- அம்மம்மா

கண் கலங்கி நான்
கவலையுறும் போது - உன்
முந்தானை நீ எடுத்து முகம் துடைத்து
என் மெய் தடவி - விடுவாயே

- அம்மம்மா

பொய்யாக இல்லை
புல்லரிக்கும் என் மனது - இன்று
பொய்யாகிப் போனதம்மா - உன் அணைப்பு

- அம்மம்மா

உன் பிரிவால் வாடும் பேரன்
கஜன், கம்சி, டிய லச்சுமி, சஸ்வின்
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★ என் அம்மாவில் அம்மம்மாவை உணர்ந்தேன். ★★★

அம்மம்மா !
உங்கள் அரவணைப்பில்
நான் வாழ்ந்த காலம்
குறுகியதாயினும்.....

என் அம்மா எனக்கு ...
பிறரின் மனம்
வருந்தும் படி வாழாமலும்
அனைவரையும் மதித்து வாழவும்
இறை சிந்தனையும்
ஒழுக்கமும் என
அத்தனை நற்பண்புகளையும்
கற்றுத் தந்தா...

இவையனைத்தும்
உங்களிடமிருந்து
என் அம்மாவூடாக நான் பெற்றதே...

உங்கள் பூட்டக்குழந்தைகளை ..
நேரில் அள்ளி அணைத்து
முத்தமிட முடியாமல் போனதே அம்மம்மா ..

என்றும் எங்களுடனேயே
இருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் ..

- பேர்த்தி நிலா -
பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளுடன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகளின் புலம்பல்

நிலையிலா உலக வாழ்வில் நிலை பெறும் பேறுக்கு
உவமையானவர் எம் நாகம்மை தாயே!
தமிழ் குலத்தின் அடையாளமாய் நன்நெறி கொண்ட
பல தலைமுறைகளின் வழிகாட்டி நீரே!

நீர், இப்புவியில் வந்தருளிய காலம்
பெருங் கொடைதான்
அழிவிலா செல்வம் கல்வியைப் போதித்தமை
அருங்கொடை தான்

பன்னிரு மடங்காய் பேரப்பிள்ளைகள் கண்டு
அவர்தம் வாழ்வில் நன்னெறி புகட்டி
பாராட்டி சீராட்டி புகழுற்று வாழ
வழிகாட்டிய எதிர்கால சந்ததிகளின் மூதாதையே!

பல பேரின் உயர்வுக்கு வழிகாட்டிய ஆசானே!
தம் மறைவின் துயர் சொல்லிலடங்காது
ஆழ் மனதில் வலம்வரும் உம் நினைவுகள்
ஒரு போதும் எம்மை விட்டு நீங்காது!

வாழ்வாங்கு வாழ்ந்த பெருங் குலத் தாயே!
தம் பெரும் புகழ் அவனியில் நிலைபெற்று
பல சந்ததிகளைச் சேர்ந்திட – உம் நினைவுகளை
நெஞ்சிருத்திப் போற்றுகின்றோம்!

உங்கள் புன்சிரிப்பும், அன்பை ஊட்டும்
தாய் உள்ளமும் நெறி பிறழா முன்மாதிரியும்
பேரப்பிள்ளைகளுக்கும் கிடைத்தது வரமே!

நாம் எப்போதும் உங்கள் நினைவுகளுடனே
அப்பம்மா, அம்மம்மா!

– பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டப் பிள்ளைகளின் தவிப்பு.....

எங்கள் பூட்டி அம்மம்மாவே! எங்கள் குலக் கொழுந்தே! பார் போற்ற வாழ்ந்த சீமாட்டியே! உங்களைப் போல நாமும் இவ்வுலகில் வாழ்வதற்கு ஆசைப்படுகின்றோம் தாயே!

எமக்கு உணவு ஊட்டி விடுவது மட்டுமல்லாது பல நல்ல அறிவுக் கதைகளைக்கூறி பல தேவாரங்களையும் சொல்லி இறை பக்தியையும் சேர்ந்து அன்பால் ஊட்டிவிட்ட தாயே! நீங்கள் இல்லாது தவிக்கின்றோம் பூட்டி அம்மம்மா!

எமக்குத் தமிழ் பாடம் மட்டுமல்லாமல் ஆங்கிலம், சிங்களம், கணிதம் என எல்லாப் பாடங்களையும் கற்றுத்தந்தீர்கள் தாயே! புத்தகம் வாசிப்பதன் மகிமையைக் கற்றுத் தந்தீர்கள் தாயே!

தள்ளாத வயதிலும் எந்நேரமும் புத்தகம் வாசிப்பதிலே ஆர்வமாக இருப்பீர்களே பூட்டியம்மம்மா. இவ்வுலகில் எம் பூட்டியம்மம்மாவுடன் இன்புற வாழ்ந்த குழந்தைகள் நாம் என பெருமை கொள்கின்றோம்!

பண்டிகைக் காலங்களிலும் நாம் பாடசாலை செல்லும்போதும் பரீட்சைக்குச் செல்லும்போதும் உங்கள் பாதார விந்தங்களைத் தொட்டு வணங்கும் போது, நீங்கள் எங்கள் சிரசு தொட்டு வாழ்த்தி ஆசீர்வாதம் தரும் காட்சியை மீட்கும்போது மெய் சிலிர்க்கின்றது பூட்டி அம்மம்மா!

மீண்டும் உங்களிடம் ஆசீர்வாதம் பெற ஏங்குகின்றோம் தாயே! சாப்பாடு சாப்பிடாவிட்டாலும் பரவாயில்லை, கல்விதானம்மா முக்கியம் என்றும் கவனமாகப் படிக்க வேண்டும் செல்வங்கள் என கல்வியின் மகிமையைத் தினந்தினம் சொல்லித்தந்து கல்வித் தெய்வமாகக் காட்சியளித்தீர்கள் பூட்டி அம்மம்மா!

பூட்டத் தாத்தாவினதும் பூட்டி அம்மம்மாவினதும் குல விருட்ச நிழலில் இளைப்பாறி நாம் சீரும் சிறப்புமாக வாழவைத்த மருதடிப் பிள்ளையாருக்கும் கோடான கோடி வணக்கங்கள்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

– உங்களைப் பிரிந்து வாழும்
பூட்டக் குழந்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் மாமிக்கு எமது கண்ணீர் அஞ்சலி...

எங்கள் வாழ்வில் வசந்தங்களும், வரட்சிகளும் வந்து வந்து போயின. மட்டுவில் கிராமம் வளமுடையது. வயல்களும், தோட்டங்களும், மா, பலா, மரங்களும், உயர்ந்த பனை, தென்னந்தோப்புகளும் நிறைந்த அழகிய கிராமம். அங்குதான் பரியாரியார் அருணாச்சலமும், ஆச்சி முத்துவும் வாழ்ந்தார்கள். அவர்களின் வழித்தோன்றல்கள் தான் நாம். எங்கள் பட்டி "பரியாரியார் பட்டி" றோட்டில் ஆரம்பிக்கும் ஒரு சிறிய ஒழுங்கை. சின்னமாமா வீட்டில் தொடங்கி பெரியம்மா வீடு, யோகம்மா மச்சாளின் வீட்டில் முடிவடையும் எல்லாம் எங்கள் தாத்தாவின் காணிகள் தான். எத்தனை ஏக்கர் காணி, நிலம், வயற்காணி, தோட்டக்காணி எங்கள் பரியாரி தாத்தா அந்த கிராமத்தையே ஆட்சி செய்தார். தம்பிரத்தினம் என்ற குட்டி மாமாவோடு அவரின் மருமகளான நாகம்மை என்ற ஆசிரியை இணைந்து கொண்டார்.

அவர் அதன் பின்பு ஆசிரியர் தொழில் மட்டுமன்றி நிலம் உழுது வளம் பெருக்கி பண்ணைகளை விரிவாக்கி மாமாவோடு இணைந்து செயலாற்றுவதில் மகா கெட்டிக்காரி, கனகம்மா மச்சாள என்றால் (மாமாவின் இரண்டாவது) அவவிற்கு ஒரு தனி விருப்பம். என்ரை இராசாத்தி, என்ரை பிள்ளை, மச்சான் என்ற இனிய சொற்களால் எல்லோரையும் கவர்ந்து கொண்டார். இனிய சொற்கள் மட்டுமல்ல இனிப்பான பண்டங் களிலும் அவாவிற்கு விருப்பம். அழகான இனிப்புப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டங்களைச் செய்து எமக்கும் கொடுத்து தானும் சாப்பிடுவார். எங்கள் மணியக்கா மாமியின் அப்பத்தை புகழாத நாட்களே இல்லை. மாமாவின் மொரிஸ் மைனர் காரில் நல்லூர் முருகனிடம் சென்று கடலையும், ஐஸ்பழமும் சாப்பிட்டுவிட்டு இரண்டாம் ஷோ சினிமாப்படம் பார்த்து நித்திரை வெறியோடு வீடுவர எம்மை தூக்கித் சென்று வீட்டில் படுத்திவிட்டதை எப்படி மறப்போம். எங்களுக்கு சுகயீனம் என்றால் மாமாதான் வைத்தியம். எங்களை மடக்கிப் பிடித்து மருந்து பருக்குவதிலும் வல்லவர எங்கள் மாமி. எங்களை மட்டுமல்ல எங்கள் பிள்ளைகளையும், தங்கள் பேரப்பிள்ளைகள் போல் தோளில் சுமந்து குழந்தைகளை வயல் காட்டி, இரதை வாழைப்பழம் கொடுத்து தாலாட்டி சீராட்டி வளர்த்த மாமா மாமியல்லவா ஓ... அந்த அழகிய இனிய நாட்களை எண்ணி ஏங்குகின்றோம். எங்கு வாழ்ந்தாலும் எம் உறவுகளோடு தான் எம் நினைவுகள்

அன்பு மருமக்கள்
மணி, ராணி, குமாரி
Rani Ganeshan
No:38, Smith Street
wentworthville N S W
2145, Australia

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் மாமன் மாமியின் நினைவுகள் என்றும்.....

எனது வாழ்க்கையின் ஒளிமயமான எதிர்காலத்தை நிருவகித்தவர்கள் இவர்களே. இளம் பராயத்தில் இருந்து எனது ஆசைகளை நிறைவேற்ற எந்தநேரத்திலும் கைகொடுத்தவர்களும் இவர்களே. பொங்கலுக்கு வெடிகளும், பட்டாசுகளும் தீபாவளிக்கு உடுப்புகளும் என எல்லாம் அனுபவித்த காலங்கள்...

என்றும் பசுமையானவை. காரில் எல்லா நிகழ்வுகளுக்கும் கூட்டிச் சென்ற பொழுதுகள் அருமையானவை.

எனது படிப்பு முடிந்த பின் விசுவமடுவில் விவசாயம் செய்து கொண்டு இருக்கும் போது அடிக்கடி வந்து நான் கஸ்ரப்படுவதைப் பார்த்து தாங்கள் ஆசைப்பட்டபடி படிக்கவில்லையே என்று கவலைப்படுவார்கள் என் ஆசை ஒரு பாடகராக வரவேண்டும் என்பதே. ஆனால் காலம் செய்த கோலம் ....

எனினும் அவர்களின் மூத்த மகளாகிய சித்திராவை தங்கள் பரம்பரை வைத்தியராக பட்டம் பெறச் செய்து எனது தகுதி அந்தஸ்தைப் பார்க்காது சொந்த மூத்த மருமகனாக்கி பெருமை அடைந்தார்கள்.

மாமி ஒர் ஆசிரியர். எனது வகுப்புக்கும் அவர்தான் கணித பாடம். ஒரு நாள் வாய்ப்பாடு கேட்கும் போது 12 X 6 எத்தனை ..... என் சக மாணவர்களிடம் நான் ரீச்சருக்கு தெரியாது எங்களிடம் கேட்கின்றா என்று சொன்னதும் பிரம்பை எடுத்து அடிக்காமல் வெளியே சென்று விட்டார்.. மருமகன் என்ற பாசம் காரணமோ... என்று படுக்கையில் .. இறுதிக்காலத்தில் கேட்டபோது சிரிப்பு மட்டுமே பதிலாகியது.

1975ஆம் ஆண்டிலிருந்து தன் மூத்த மகளின் பேரப்பிள்ளைகளான ஜனனி, ஆரணி, கஜன், நிலானியை கண்ணும் கருத்துமாக வளர்த்து பண்பானவர்களாக்கி ஆனந்தமடைந்தனர்.

2016ஆம் ஆண்டு தொடக்கம் துரதிஸ்டவசமாக ஓரிடத்தில் இருக்க வேண்டிவந்தது. எங்களது வீட்டில் இருக்கும் போது எனது உடுப்புக்கள் சிலவற்றை தோய்த்து காயவிட்டிருந்தேன். "அவ் உடுப்புக்களை தான் மடித்து வைத்தமைக்கு ஊதியம் தரவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மாமி கூறியபோது திருமணமாகி 40 வருடங்களாகியும் சீதனம் தரவில்லை என்றும் அதற்காக கழித்து விடும்படி நான் பதில் கூற "தன் பொன்குஞ்சை வளர்த்து ஆயுர்வேத வைத்தியராக்கி உங்களுக்கு தந்தது போதாது சீதனம் தேவைப்படுகின்றதோ என்று சிரித்து கொண்டு கூறியதைக் இன்றும் எண்ணிப் பார்க்கின்றேன்.

மாமியின் இறுதிக் காலத்தில் நீர் ஆகாரங்களைப் பருக்கும் போது "அப்பு ராசா! நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா? என்று கேட்டு என் தலையைத் தடவி விட்டார். தனக்கு இனி ஒன்றுமே வேண்டாம் என்று தன் கதையை நிறைவு செய்து விட்டார்.

என் இளம் வாலிப வயதில் 1960ல் MGR, சறோஜாதேவி யாழ் பலாலி விமான நிலையம் வந்தபோது அவர்களைப் பார்க்கச் செல்வதற்கு எனக்கு (கார்) வாகனம் தந்து செலவுக்கு நிறைய பணமும் தந்த மாமாவை மறக்கமுடியவில்லை.

1977ஆம் ஆண்டு மூத்த பேர்த்தி ஜனனியிடம் பணம் கொடுத்து இனிப்பு வாங்கும் படி கூறுவார். மிகுதிப் பணத்தை கொடுத்தால் அப்பாவிடம் கொடுக்கும்படி கூறுவார். மறைமுகமாக என் சட்டைப் பையில் பணம் இருக்குமோ என்பதைப் புரிந்து என்னிடம் சேர்ப்பிக்கும் பெருந்தன்மையாளன் என் மாமா.

சிரித்த முகத்துடன் எப்போதும் அன்பாக கதைப்பவர். எவரையும் கவலையாக இருக்க விடமாட்டார். எனது சிறு வயதில் நானும் சித்திராவும் விளையாடும்போது எனது ஆச்சியின் மாமாவின் அப்பு (எனது பேரனார்) தனது பேர்த்தி கிளிக்குஞ்சை கொண்டு போகக் சுத்தறான் பேரன் கவனம் என சொல்வாராம். என மாமி இறுதிக் காலத்தில் சொல்லிய பழைய நினைவுகள் என்மனதில் நிழலாடுகிறது.

எனது தாய்க்கும், மாமாவுக்கும் இறுதி நேரம் பாலூட்டி கடமை செய்யவில்லை. பாழ்பட்ட நாட்டு நிலைமை தாய்க்கு செய்ய முடியாததை அன்பு மாமிக்கு பணிவிடையும், இறுதிக்கடமையும் செய்வதற்கு வழிவிட்ட கடவுளுக்கு நன்றி.

மூத்த மருமகன்
ஈசன் நினைவு
வட்டக்கச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமகள் நினைவலைகள்....

"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்பெருமையுடைய இவ்வுலகில் பிறந்தவரெல்லாம் இறப்பது திண்ணம்' என்பது ஆன்றோர் வாக்கு.

அதை நாம் தெரிந்திருந்தாலும் எங்கள் அன்புக்குரிய மாமா அருணாச்சலம் தம்பிரத்தினம் அவர்களினதும் அவர்தம் பாரியார் நாகம்மை தம்பிரத்தினம் அவர்களினதும் இழப்பினை ஈடுசெய்ய எவராலும் முடியாது.

இறுதி நேரம் உங்கள் அருகில் இருப்பதற்குக்கூட கொடுத்துவைக்காத பாவிகளாகிவிட்டோம். விதி யாரைத்தான் விட்டது.

எங்கள் மாமாவின் பெருமையை கனடாவில் வாழும் கப்புது, கரணவாய் முதியவர்கள் என்னுடன் கதைக்கும்போது, 'ஆயுர்வேதப் பரியாரியார் தம்பிரத்தினத்தார்' என அன்பு பாராட்ட அழைக்கும் போது நான் பெருமைப்பட்டதுண்டு. எங்கள் பரம்பரையின் பொக்கிசம் அவர். தனக்குக் கிடைத்த பிறவியை வரமென எண்ணி அறவழியில் வாழ்ந்து இன்பம், துன்பம் இரண்டையும் சரிவரப் புரிந்து, உணர்ந்து தனக்கு மட்டுமன்றி மற்றவர்க்கும் பயன்தரச் செய்த புண்ணிய ஆத்மா எனலாம்.

மாமி அவர்கள், மணம் செய்த காலம் முதல் மரணிக்கும் கடைசி நேரம்வரை ஆசிரியப் பணியோடு கணவருக்குரிய பணிவிடைகள் சகலதையும் பொறுமையோடு மனம் கோணாமல் செய்யும் குண இயல்புகளைக் கொண்ட பத்தினியாவார். குடும்ப அழுத்தங்களைத் தன் தோளிலேயே சுமந்து மாமாவின் அழுத்தங்களைக் குறைத்தவர்.

இல்லற வாழ்வில் மாமா பெற்ற வெற்றிக்குக் காரணம் இவரே. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பது இவர்களுக்குப் பொருந்தும். மாமாவுக்கு வைத்தியத் தொழில் தக்கதொரு உயர் நிலையைத் தந்ததென்றால் மாமி அவருக்குக் கிடைத்த கொடை எனலாம்.

தமது புத்திர புத்திரிகளை தக்க வயதடைந்ததும் ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்விவரை கற்பித்து, வையகத்தில் உயர்ந்திருக்கச் செய்து பேரப் பிள்ளைகள் பூட்டப் பிள்ளைகளைக் கண்டு நிறைவான வாழ்வைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டனர். சமய சமூகப் பணிகளிலும் தவறாது கலந்துகொள்வர். உற்றார் உறவினர் யாவரையும் அன்பால் அரவணைப்பர்.

வாழும் காலத்தில் மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் மாணவச் செல்வங்களுக்கு அறிவொளி ஊட்டிய நூலகமாகவும் சமூகத்தில் மறையாத மாணிக்கமானீர்கள். இவ்வாறு மனையறம் காத்து மனிதருள் மாணிக்கங்களாய் மிளிர்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்ட மாமா, ' மாமி அவர்களின் ஆத்மா இறைவனின் திருப்பாதங்களை அடைய நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! சாந்தி!!!

அன்பு மருமகள்,
திருமதி, கமலம் சபாரத்தினம் .
(குடும்பத்தினருடன்)
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளின் மனதிலிருந்து.....

இரத்தினக்குஞ்சி, குஞ்சியம்மா என்றே நாம் அழைப்போம். அன்புதான் புன்சிரிப்பாய் நிறைந்திருக்கும். பெரியண்ணையின் பிள்ளைகள் என்ற அக்கறையும், ஆதரவும் எப்போதும் இருக்கும்.

மட்டுவில் மண்ணில் பரியாரி பட்டியின் கொடிகளாய் அக்கா, அண்ணா, தம்பி, தங்கை, மச்சான், மச்சாள், மாமா, மாமி என அத்தனை உறவுகள் எமக்குள். மட்டுவில் கமலாசனியில் கல்வி தொட்டு, சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி பெண்கள் கல்லூரி, யாழ்/பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்/இராமநாதன் கல்லூரி வரை கல்விபெற்று தொழில் நிமித்தம் விசுவமடு, அம்பலப்பெருமாள், வவுனிக்குளம், வட்டக்கச்சி, துணுக்காய், முரசுமோட்டை என காடு வெட்டி கழனி ஆக்கி நிலைகொண்ட எம் உறவுகள்.

குஞ்சியம்மாவின் அடுக்களையில் என்றுமே வேலை ஓய்ந்ததில்லை. அடுப்பும் அணைந்ததைப் பார்த்ததில்லை. விதம்விதமாய், வகைவகையாய் உணவின் சமையல் ஒருபுறம், பரிமாறல் மறுபுறம் குஞ்சியிடம் வைத்தியத்துக்கு வருபவர்கள், வன்னியில் இருந்து வரும் உறவினர்கள் என அனைவருக்கும் உணவு காத்திருக்கும். குஞ்சியம்மா அமுதசுரபியாய் வீற்றிருப்பார் எப்போதும்.

சோற்றுடன் கறிகளைப் பிசைந்து அச்சாறு, ஊறுகாய், தயிர், பப்படம், மிளகாய் பொரியல், வடகம் என வகை வகையாய் சேர்த்து, கவளம் கவளமாக கையில் வாங்கிக் கூடியிருந்து உணவு உண்ட காலங்கள் அருமை. குஞ்சியம்மாவின் கைப்பக்குவம் அப்படிப்பட்டது.

தோட்டத்தில் அறுவடை செய்த பயறு, உழுந்து முற்றத்தில் காய, நெல் வீட்டில் நிறைந்திருக்க, தோட்டத்துக் காய்கறிகள் மூலையில் குவிந்திருக்க, தமிழ் மருந்து அரைக்கும் வேலை துரிதமாய் நடைபெற, கொல்லைப்புறத்தில் பசுக்கள் தம் கன்றினை நக்கிப் பால் கொடுக்க, காகங்கள்கூட குஞ்சியின் கா.... கா.... ஒலிக்காக விருந்துக்குத் தயாராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தில் காத்திருக்க, பிள்ளைகளும் சுற்றத்தவர்களும் அங்குமிங்கும் ஒழுங்கைக்குள் ஓடி விளையாட, வீடு அமர்க்களமாய் இயங்கும் நிலைமையிலேயே எப்போதும்.

குஞ்சியம்மாவின் உபசரிப்புக்கிடையில் குடும்பம் தொடர்பான அக்கறையான விசாரணைப் பட்டியல் நீண்டிருக்கும்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்களின் கல்வி நிலை, பொருளாதார நிலை வரை ஆசிரியருக்கே உரித்தான கண்டிப்பும் கலந்திருக்கும்.

திருநெல்வேலிப் பயிற்சிக் கல்லூரியில் பன்ன வேலை பழகச் செல்லக் காசும் உடுப்புகளும் காரும் மட்டுமல்லாது நகைகூடத் தந்து அனுப்பினவா என பாக்கியம் அக்காவின் ஆதங்க வெளிப்பாடு ஒருபுறம், காரிலே படம் பார்க்கக் கூட்டிச்செல்வதுடன் கைச்செலவுக்குக் காசும் தருவார்கள் என அண்ணன்மார் மறுபுறமும் இன்றும் எண்ணும் நினைவுகள் பற்பல.. அன்புக்கு எல்லையே இல்லை.....

பெரியப்பு
(பொன்னுத்துரை பரியாரி
உறவுகள் சார்பில்)

வெற்றி உன்னிடம்

கவ்டம் வரும் போது
கண்ணை மூடாதே
அது உன்னைக் கொன்றுவிடும்
கண்களை திறந்து பார்.
நீ அதை வென்று விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில் மருதடி

தான்தோன்றிப் பிள்ளையார் கோயில்

மட்டுவில் – சாவகச்சேரி – யாழ்ப்பாணம்

தர்மகர்த்தா சிவஸ்ரீ போன் லட்சண மாதாக் குருக்கள் (அம்பலம் ஐயா)

எங்கள் கிராமம் மட்டுவில். பன்றித் தலைச்சி அம்மன் கோயில் பிரசித்தி பெற்றது. எமது கிராமத்தில் சமயப்பெரியார்கள், கல்வி மான்கள், மருத்துவர்கள் தோன்றி சேவை ஆற்றியுள்ளார்கள். அத்தகைய பெரியார்கள் வரிசையில் அ.தம்பிரத்தினப்பரியாரி குறிப்பிடத்தக்கவர். இவரை ரத்தினப்பரியாரி என அன்பாக அழைப்பார்கள். ஆயுர்வேத வைத்தியராகிய இவரின் சேவை ஊர்மக்களால் பாராட்டப்பெற்றது.

போர்க்கால சூழலில் அவரின் சேவைபற்றி மக்கள் அறிவார்கள். ஊடரங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது எமது தகப்பனார் அ. பொன்னுத்துரைக் குருக்களுக்கு இரவில் கடுமையான சுகயீனம் ஏற்பட்டது. ஆஸ்பத்திரிக்கு போக முடியாத சூழ்நிலை. அப்பொழுது இவரிடம் வைத்திய உதவி கேட்டு நின்றபொழுது உடனேயே நித்திரையால் எழும்பி மருந்துகள் கொண்டு அப்பாவுக்கு சிகிச்சை செய்து சுகம் பெற உதவி செய்தார். இப்படியான சேவை உள்ளம் கொண்ட உத்தமரான இவரது வாழ்க்கைத் துணைவியார் நாகம்மை. எங்கள் மருதடி விநாயகர் கோயிலுக்கு வெள்ளிக்கிழமைகளில் தவறாது வந்து அர்ச்சனை செய்து வழிபாடுகள் செய்வார்கள். இருவரும் தெய்வ பக்தி நிறைந்தவர்கள். பிள்ளையார் கதை விரத காலத்தில் நாகம்மா அவர்கள் ஒவ்வொரு நாளும் பிள்ளையாரிடம் வந்து விரதகாப்புக் கேட்டு அர்ச்சனை வழிபாடு செய்யத் தவறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி விரத பூசைக் காலத்தில் கும்பம் வைக்கும் முதலாவது பூசையை நாகம்மா அவர்கள் பொறுப்பேற்று சிறப்பாக நடத்துவார்கள்.

தம்பிரத்தினம் பரியாரி வைத்திய சேவையை அவரது மகள் சித்திரா தொடர்ந்து வருகின்றார். நாகம்மா ஆசிரியையாகப் பணியாற்றி சமூகத்தில் சிறப்பிடம் பெற்று இவர்களின் பிள்ளைகளும் அன்னை தந்தையின் வளர்ப்பில் நலமாக வாழ்கின்றார். தம்பிரத்தினம் வைத்தியர் மறைவுக்கு பின்னர் நாகம்மை ஆசிரியர் பணியில் ஓய்வு பெற்று பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் பாசமாக வாழ்ந்து வந்தார். காலத்தின் வல்லமையையால் முதுமை நோயாலும் அவதிப்பட்ட அவரை இறைவன் தன்னிடம் அழைத்துக் கொண்டார். தாயின் பிரிவால் துன்பப்படும் அவரது பிள்ளைகள் மன ஆறுதல் பெறவேண்டும். விநாயகர் அருளால் நாகம்மை அவர்களின் ஆன்மா சாந்திபெற வேண்டும் என பிரார்த்தனை செய்கின்றேன்.

பொ.லட்சண மாதா குருக்கள்
மருதடி விநாயகர் கோயில்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி தம்பிரத்தினம் நாகம்மை அவர்களின் ஆத்மசாந்தி பிரார்த்தனை

மேற்படி நாகம்மை அவர்கள் மட்டுவில் கிழக்கில் வாழ்ந்து மட்டுவிலில் கமலாசினி வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பல வருடங்கள் சேவையாற்றியுள்ளார். இவரது கணவர் ஆயுர் வேத வைத்தியராக இறக்கும் வரை மக்களுக்கு சேவையாற்றி தனது வாழ்க்கையை முடித்துக்கொண்டுள்ளார்.

இவர்களின் குல தெய்வமாக காத்தவராயரும் வீரபத்திரரும் இருந்த பொழுதிலும் பன்றித்தலைச்சி அம்மனையும் தங்கள் அபிமானத் தெய்வமாகக் கொண்டு சேவைகள், திருப்பணிகள் போன்றவற்றிலும் பக்தியுடன் பங்காற்றியுள்ளார். சிறுக்கட்டி பெருக வாழ்ந்து பல மக்கட் செல்வங்களைப் பெற்று அவர்களைச் சான்றோர்களாக்கி இன்பங் கண்டுள்ளார்.

ஆசிரியர் தொழிலில் ஓய்வு பெற்ற தன் பின்பு தனது மகளுடன் வட்டக்கச்சி பிரதேசத்தில் வாழ்ந்து வரலானர். இக்கால கட்டத்தில் ஸ்ரீ ரங்கநாதப் பெருமானை தன் அபிமானத் தெய்வமாக வழிபட்டார். அவரது பாடல்களை மனனம் செய்து பொழுதைத் தவப் பொழுதாக்கினார். இவர்களது வாழ்க்கை தற்கால மக்களுக்கு பாடமாகவுள்ளதை நாம் அவதானிக்கலாம். சுயநலமற்ற வாழ்க்கை, போதுமென்ற மனப்பான்மை, இறைபக்தி, உணவுக்கட்டுப்பாடு, பாரம்பரிய உணவுப் பயன்பாடு, ஆயுர்வேத முறைகளான வைத்தியம் போன்றவற்றைக் கையாண்டதன் பயனாக 97 வது வயதுவரை எந்த வித நோயும் அணுகாமல் ஆங்கில வைத்திய முறைக்கு ஆளாகாமலும் வாழ்ந்து சென்றிருக்கின்றார். தற்கால வாழ்க்கை முறைக்கு அடிமையாயுள்ள மக்கள் இவரின் வாழ்க்கையை பின்பற்றினால் வாழ்வாங்கு வாழலாம் என்பதில் ஐயமில்லை.

நன்றி

இவ்வண்ணம்
ஸ்ரீ ரங்கநாதப்பெருமாள் ஆலயம்
மு.தியாகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.,
M.Ed.,B.A.,PGDE(Me),Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ :021 2280024 021 2221595.
🖷 :021 2280024 021 2221595.
▯ :077 6913244
✉ : shritharanmp@gmail.com
● : www.shritharan.com

பார்லிமேன்துவ
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me),Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ :021 2280024 021 2221595.
🖷 :021 2280024 021 2221595.
▯ :077 6913244
✉ : shritharanmp@gmail.com
● : www.shritharan.com

2021.06.28

வாழும் காலமெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு, மட்டுவிற்பதியை வாழ்விடமாக்கி .தன் அந்திம காலத்தை வட்டக்கச்சியில் வாழ்ந்து முடித்து. தொண்ணூற்று ஏழாவது வயதில் அமரத்துவம் அடைந்திருக்கிறார். திருமதி தம்பிரத்தினம் நாகம்மை அவர்கள்.

என் நீண்டகால நேசத்திற்குரிய ஆயுர்வேத வைத்தியர் கலாநிதி சித்திரா அன்ரியின் தாயார் என்ற ரீதியிலேயே அவர் எனக்கு அறிமுகமாகியிருந்தார். எனது பூர்வீக மண்ணான வட்டக்கச்சியில், உறவுநிலைகளை எல்லாம் கடந்து பரிபூரண அன்பினால் என்னை தம் வசப்படுத்தியவர்களுள் முதன்மையானவர்கள் ஈசன் மாமாவும், சித்திரா அன்ரியும். எப்போதும் என் மனதுக்கு நெருக்கமான அவர்கள் இருவரும் தங்களின் சொந்தப் பிள்ளைகளாகவே என்னை இப்போது நேசிப்பதையிட்டு மன மகிழ்வேன். எனது வீட்டில் நடக்கும் இன்ப, துன்ப நிகழ்வுகள் எல்லாவற்றிலும் ஆத்மார்த்தமான அக்கறையுடன் கூடிய அவர்களின் பங்கு எப்போதும் அளப்பரியதாகவே இருக்கும்.

எமது மக்கள் இடருற்றிருந்த எல்லாக் காலங்களிலும் வட்டக்கச்சி மண்ணைத் தாண்டி திருமதி. சித்திராதேவி பரமேஸ்வரன் அவர்கள் இந்த மாவட்டத்திற்கு ஆற்றியிருக்கும் மருத்துவப்பணி மிக மகத்தானது. தன் பரம்பரை வழிவந்த ஆயுர்வேத வைத்தியராக எல்லாருக்கும் அறிமுகமான அவர் வட்டக்கச்சி மண்ணிலேயே ஒரு ஆயுள்வேத வைத்தியத்தை அமைத்து பகலிரவு பாராது, நோய் தீர்க்க தன்னை நாடிவரும் ஏழை. எளிய மக்களின் நோய் நீக்கும் மருத்துவராக மட்டுமன்றி அன்பு, நேர்மை, சேவை மனப்பாங்கு, மனிதநேயப்பண்பு எல்லாமும் வாய்க்கப்பெற்ற ஒருவராக தன்னை அடையாளப்படுத்தியிருப்பது அவரவது தாயாரின் நல்லியல்புகளைப் பிரதிபலிப்பதாகவே அமைந்துள்ளது.

அதுபோலவே, தன்னைநாடி வருபவர்களை டொக்ரரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கணவரும் அனுசரித்து விருந்தோம்பும் முறையும், யாருடைய மனமும் புண்படும்படி பேசியறியாத அவர்களது மென்னியல்புகளையும் கண்டு பலமுறை நான் வியந்திருக்கிறேன். வட்டக்கச்சி மண்ணில் இத்தனை காலமாக வாழும் இவர்களது குடும்பத்தினரோடு, முரண்பாடுடையவர்கள் என்று எவருமே இருக்க முடியாது. அத்தனை தூரம் மற்றவர்களை அனுசரிக்கும் பண்பு அவர்களுக்கு மட்டுமே வாய்க்கப் பெற்ற வரம் என்பேன். இவை எல்லாவற்றையும் கடந்து யார் எந்தத் தவறு செய்தாலும் அதை செய்தாலும் அதைச் செய்தவர்களே ஏற்கும் பாங்கில் நேருக்கு நேரே சுட்டிச் செல்லும் நெஞ்சுரம் நிறைந்த அவர்களின் வாழ்க்கை முறை எல்லாருக்கும் உதாரணமானது.

நான் உட்பட, பலருக்கு முன்னுதாரணமானவராக, வழிகாட்டிய எம் கண்முன்னே வாழ்ந்து காட்டும் ஒரு சமூக நேயமிக்க பெண்ணை தன் மூத்த மகளாகப் பிரசவித்த அந்தத் தாயின் வாழ்வியலை அவரது மக்களின் வழி எம்மாலும் அறிந்துகொள்ள முடிகிறது. ஒரு ஆசிரியரான அவர் தான் வாழ்ந்த மட்டுவில் மண்ணிலேயே தன் ஆசிரியப் பணியில் அதிக காலத்தைக் கழித்திருக்கிறார் என்பது அவரது ஊர்ப்பற்றுக்கான உதாரணம். பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றியிருந்த போதும் தன் பணி ஓய்வுக்காலம் வரையான 36 ஆண்டுகள் யாழ்/மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக ஆசிரியப் பணியாற்றியிருக்கிறார் என்பது எமக்கு ஆச்சரியமளிக்கிறது.

நல்லதொரு ஆசிரியராக கல்விப் பணியாற்றிய சமநேரத்தில் சமூகத்தை நேசிக்கும் பிள்ளைகளைப் பிரசவித்து அவர்களைக் கல்வியிலும் பண்பிலும் சிறந்தவர்களாக வளர்த்தெடுத்து நற் தாயாக வாழ்ந்து இவ்வுலக சுகங்கள் எல்லாவற்றையும் கண்டு, களிப்புற்று தன் 97ஆவது வயதில் இறைபதமெய்தியிருக்கும் திருமதி தம்பிரத்தினம் நாகம்மை அவர்களின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்.
482, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி,கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி
கரச்சி ப்ரதேசிய சபாவ, கிளிநொச்சிய
KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI

A -9 நெடுஞ்சாலை, கிளிநொச்சி. A- 9 Road, Kilinochchi
E-Mail:- kilinochchi1kps@gmail.com

எமது இலக்கம் / My No / මගේ අංකය: NP/14/45(02)/Council/ Gen/2021

திகதி / Date / දිනය: 28.06.2021

அமரர் தம்பிரத்தினம் நாகம்மை அவர்களுக்கான அஞ்சலிக்குறிப்பு

எமது ஆயுர்வேத வைத்தியராகக் கடமையாற்றிய பரமேஸ்வரன் சித்திராதேவி அவர்களின் அன்புத்தாயாரும் எமது சபையில் சந்தை மேற்பார்வையாளராகக் கடமை யாற்றிய ஆறுமுகம் பரமேஸ்வரன் அவர்களின் அன்பு மாமியாருமாகிய தம்பிரத்தினம் நாகம்மை அவர்கள் 97வது வயதில் அமரத்துவம் அடைந்திருக்கின்றார்.

பரமேஸ்வரன் சித்திரா மற்றும் ஆறுமுகம் பரமேஸ்வரன் ஆகியோர் எமது சபையில் சேவையாற்றுக்கின்ற காலப்பகுதியில் அரச சேவையில் விசுவாசத்துடனும் மக்களுக்கு அர்ப்பணிப்புடனும் பணியாற்றியிருந்தார்கள். ஆயுர்வேத வைத்தியராக திருமதி. சித்திராதேவி பரமேஸ்வரன் அவர்கள் எமது மக்கள் இடருற்றிருந்த காலப்பகுதியில் இம் மாவட்டத்திற்கு ஆற்றியிருக்கும் மருத்துவப்பணி மிக மகத்தானது. வட்டக்கச்சி மண்ணில் ஓர் ஆயுர்வேத வைத்தியசாலை அமைத்து பகலிரவு பாராது மக்களுக்கு சேவையாற்றியிருக்கின்றார். ஆயுர்வேத வைத்தியராக மட்டமல்லாது தன்னை நாடி வருகின்றவர்களுக்கு சேவையாற்றும் மனப்பாங்கு, மனிதநேயப்பண்பு, நேர்மை போன்ற அவரது குணவியல்புகள் மூலம் தாயின் வாழ்வியலை அவரது மகளின் வழி எம்மாலும் அறிந்துகொள்ள முடிகின்றது.

மனித வாழ்வின் மகத்துவத்தை அதன் மாண்பை அவரது ஆத்மார்த்தமான மனிதப் பண்புகளாலும் கட்டியெழுப்பியவர். ஆசிரியராக பல மாவட்டங்களில் கடமையாற்றி பல மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர். நல்லதொரு ஆசிரியராகப் பணியாற்றி தனது 97வது வயதில் இறைபதம் அடைந்திருக்கும் தம்பிரத்தினம் நாகம்மை அவர்களின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அருணாசலம் வேலுமயிலன்
தவிசாளர்
கரைச்சிப்பிரதேச சபை
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கல் செய்தி

மனித வாழ்க்கை நிரந்தரம் இல்லை. ஆயினும் ஒருவர் செய்யும் நன்மை தீமை நிரந்தரமானது. அமரர் நாகம்மை தம்பிரத்தினம் அம்மா அவர்களும் இப் பூவுலகில் 97 அகவை வரை பயணித்தவர்.

ஆசிரியர் பணியை 36 ஆண்டுகள் நிறைவு செய்தவர். எனவே இவ் அம்மையார் வையத்துள் வாழ்வாங்கு வாழ்நத பெருமாட்டி என்று கூறினால் மிகையாகாது.

இவரது வாழ்வு முழுமையும் மட்டுவில் மண்ணினது வளர்ச்சியோடும், வரலாற்றோடும் பின்னிப் பிணைந்திருந்தது. 2016ஆம் ஆண்டின் பின் தன் முத்த மகளின் இல்லத்தில் சந்தித்த போது எப்போதும் சிரித்த முகம், இனிய மொழி பேசும் பாங்கு, இறைசிந்தை இவரிடம் நான் கண்டு கொண்டவை. மிகுந்த தன் நம்பிக்கையுடன் விரிந்த நல் அறிவுடனும் பல விடயங்களையும் கூறி மகிழ்வார். 97 அகவை வரை தொற்றா நோய்களின் பிடியில் சிக்காது திடகாத்திரமாக வாழ்ந்து இறுதிக் காலத்திலும் சுய நினைவுடனேயே தன் இறுதி மூச்சைவிட்டார் என எண்ணும் போது அன்னாரது வாழ்வு சரித்திரமாகவே விரிகின்றது.

அன்னாரின் உணவுப் பழக்கவழக்கம், உடற்பயிற்சி, மனத்திடம் என்பன எதிர்கால சந்ததியினருக்கும் வழிகாட்டும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

அனுசா கிருஸ்ணலிங்கம்
பொறுப்பு வைத்திய அதிகாரி
பிரதேச வைத்தியசாலை
வட்டக்கச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DR.K.THIRULOGAMOORTHY - D-A-M-RIMP-SRI LANKA

Justice of the Peace Whole Island
Coroner
Kilinochchi District
Regd.No - 2003/04/NE/WI/E/162

Gowri Clinic,
No-28, Near AGAOffice,
Kannan Temple Road,
Kilinochchi.

Kandy Road,
Kilinochchi.
T.P-077 0687392

நெஞ்சிருக்கும்வரை நினைவுகள் பிரியாது

அன்பாலும் பண்பாலும் எங்கள் எல்லோரது இதயங்களிலும் நீக்கமற நிறைந்துள்ள அன்புத்தாய் நாகம்மை தம்பிரத்தினம் அவர்கள் இறைபதம் அடைந்த தகவல் அறிந்து மிகவும் துயரமடைந்தேன்.

அன்னார் மட்டுவில் வடக்கு சாவகச்சேரியை சொந்த இடமாகக்கொண்டு தனது சொந்த ஊரில் உள்ள பாடசாலையில் 35 வருடங்களிற்கு மேலாக ஆசிரியையாக, அதிபராக ஒரே பாடசாலையில் கடமையாற்றி எண்ணற்ற மாணவர்களதும், பெற்றோர்களதும், பொது மக்களதும் நன்மதிப்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

அமரர் நாகம்மை கல்விப்புலத்தில் வந்தாலும் பாரம்பரிய சுதேச மருத்துவக் குடும்பத்தை சேர்ந்தவர். இவரின் துணைவர் மருத்துவர் ஐயா அருணாசலம் தம்பிரத்தினம் அவர்கள் பாரம்பரிய சுதேச மருத்துவராக மிக நீண்ட காலம் வைத்தியப்பணி ஆற்றி அமரத்துவம் எய்தினார்.

அமரர் அன்புத்தாய் தம்பிரத்தினம் நாகம்மையின் பிள்ளைகளும் நற்பண்பாளராக விளங்குகின்றனர். இதில் எமது குடும்பத்தின் நண்பி மூத்த மருத்துவர் சமய சமூக சேவையாளர் வைத்தியகலாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திராதேவி பரமேஸ்வரன் மிகவும் குறிப்பிடத்தக்கவர்.

அன்புத்தாய் நாகம்மா அவர்கள் 97 வருடங்கள் இப் பூ உலகில் வாழ்ந்தார். வளமாக இறை ஆசியுடன் வாழ்வாங்கு வாழ்ந்து இறையடி சேர்ந்தார்.

அன்னார் இறுதிக்காலத்தில் நோய்வாய்ப்பட்டு வட்டக்கச்சியில் உள்ள மகள் வைத்தியகலாநிதி சித்திராதேவி பரமேஸ்வரனது இல்லத்தில் இருந்த போது சென்று பார்வையிட்டேன். இவர் குணமாகப் பிரார்த்தித்தேன். பின்னர் ஒரு வருடம்வரை நலமாக இருந்தார்.

இந்த நிலையிலே வட்டக்கச்சி இல்லத்தில் இறைபதம் எய்தினார். ஒரு புண்ணிய பூமியில் மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கூடி இருக்க அன்புத்தாய், கல்வி உலகின் வழிகாட்டி, தமிழ் மருத்துவத்தின் ஆசான் கடவுளைச் சென்றடைந்தார். நெஞ்சிருக்கும்வரை நினைவுகள் பிரியாது.

"ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மருத்துவர் கந்தசாமி, திருலோகமூர்த்தி,
நிர்வாகத்தலைவர்
யாழ் - லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி
சுன்னாகம் வளாகம்
ஆயுர்வேத பாதுகாப்பு சபை - கிளிநொச்சி
கௌரி வைத்தியசாலை கிளிநொச்சி
29 - 06 - 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாசிரியை அமரர் தம்பிரத்தினம் நாகம்மை

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கமைய இப்பூவுலகில் பெறுதற்கரிய பேறாகிய மனிதப்பிறவி பெற்று இம்மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து தனது குருத்தொழில் மூலம் அனேகரை உயர்நிலைக்கு உயர்த்தியவர். மனத்தில் தூய்மை, வாயினில் இன்சொல், சிறந்த அரவணைப்பு, பண்பான சுபாவம் உள்ளவர் தான் தம்பிரட்ணம் நாகம்மை என்ற பெருந்தகை.

யாழ்ப்பாணத்தில் பிறந்து திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் சிறப்புடன் கல்விகற்று அப்போதைய உயர்நிலை SSC மற்றும் HSC யில் சிறந்த பெறுபேறு பெற்று ஆசிரியர் பணி செய்ய விரும்பினார். அதற்கு முன்னோடியாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் சேர அதற்கான பிரவேசப் பரீட்சையிலும் சித்தி பெற்று அக் கல்லூரியில் பயிற்சி பெற்ற காலத்தில் பிரபல ஆயுர்வேத வைத்தியர் அருணாசலம் தம்பிரத்தினம் ஐயா அவர்கள் தனது சகோதரியைப் பார்க்க பயிற்சிக் கல்லூரிக்கு வந்த வேளை சக மாணவி நாகம்மையைக் கண்டு காதல் கொண்டார். இருவரும் கருத்தொருமித்து 1950ஆம் ஆண்டில் திருமண பந்தத்தில் இணைந்தனர். பயிற்சி முடித்தபின் நாகம்மையை தனது ஊரான மட்டுவிலில் குடியமர்த்தி அவ்வூர் கமலாசினி வித்தியாலயத்தில் ஆசிரியர் பணியும் கிடைக்கச் செய்தார். ஊரின் சிறப்புக்கு அவ்வூர் பாடசாலைகளின் உயர்ச்சி ஆலயங்களின் உயர்வுதான் காரணமாகின்றன. மட்டுவிலில் கமலாசினி வித்தியாலயம் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் என்பன கலங்கரை விளக்கங்களாகும். இவ்வித்தியாலயத்தில் ஆசிரியர், உப அதிபர் பணியில் தொடர்ந்து 35 வருட சேவையின் பின்பு ஓய்வு பெற்றார். இப்பாடசாலையில் இவரது சேவை சரித்திரமாகி விட்டது.

இத்தம்பதிகளுக்கு 07 ஆண்பிள்ளைகளும் 03 பெண் பிள்ளைகளும் பிறந்தனர். தனது பிள்ளைகளின் உயர்வுக்கும், அவ்வூர் பிள்ளைகளின் உயர்வுக்கும் அயராது பாடுபட்டவர். இவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் வைத்தியராகவும் உயர் தொழில்நுட்பங்கள் பயின்று அவைதனில் முன்னிலையிலுள்ளனர். தம்பிரத்தினம் ஐயாவுடன் ஆயுர்வேத வைத்தியம், ஆயுர்வேத உணவுப் பழக்கவழக்கங்கள் வேளாண் செய்கையிலும் சேர்த்து உழைத்துள்ளார். இவர்கள் சிறந்த விவசாயிகளும் கூட. தம்பிரத்தினம் ஐயாவுக்கு "விவசாயமன்னன் பட்டம் பெறவும் அவரைக் கௌரவிக்கவும் அம்மா உதவியுள்ளார். இதனால் அரசால் இவர்களுக்கு அம்பலப்பெருமாளில் 10 ஏக்கர் வயல் நிலமும் கொடுக்கப்பட்டது.

இவர் தனது வாழ்நாளில் நோய் நொடிக்கு ஆளாகி ஆங்கில வைத்தியத்தை நாடவில்லை. ஓய்வு பெற்ற பின்பும் மட்டுவிலில் வாழ்ந்தவர். தனது 93வது வயதில் வழுக்கி விழுந்து காலில் ஏற்பட்ட முறிவுக்காக ஆங்கில வைத்தியம் செய்து தனது மூத்த மகள் ஆயுர்வேத வைத்தியர் சித்திரா பரமேஸ்வரனுடன் வட்டக்கச்சியில் தங்கி விட்டார். மீண்டும் 2021 இல் விழுந்த காலில் மீண்டும் முறிவு ஏற்பட்டு ஓரளவு குணமடைந்து வட்டக்கச்சியில் இருந்தபோது தனது 97 வது வயதில் 09.06.2021 அன்று பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் கதைத்துக்கொண்டே அமரர் ஆகிவிட்டார். இவர்களுக்கு 24 பேரப்பிள்ளைகள், 26 பூட்டப்பிள்ளைகள். இவரை 100 வயது வரை காப்பாற்றவேண்டும், கொப்பாட்டப்பிள்ளைகளையும் பார்க்கவைக்க வேண்டுமென்ற ஆசையும் நிறைவேறவில்லை இவரது இழப்பு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள், அயலவர்கள் ஆகியோருக்கு பொறுக்க முடியாத நிலை, விதியை எவராலும் வெல்ல முடியாது. உலக நியதியும் அதுவே. "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்ற குறளுக்கமைய இவர் குடும்ப விருட்சத்தில் விழுதாக வேரூன்றுவார் என ஆறுதலடைவோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

சிவக்கொழுந்து புவனேஸ்வரன்
சமாதான நீதவான்
பிரதேச சபை உறுப்பினர் – கரைச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். உவந்தளித்த மட்டுவில் அன்னை...

அமரர் திருமதி. நாகம்மை தம்பிரத்தினத்தை நான், யாழ். மட்டுவில் கமலாசனி வித்தியாலய ஆசிரியையாகவும், உப அதிபராகவும், ஒரு தாயாகவும் நன்று அறிவேன். அவருடைய மகள் என்னுடன் யாழ். மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர் என்பதாலும், அவருடைய பேரப்பிள்ளைகள் என்னிடம் கல்வி கற்றவர்கள் என்பதாலும் நன்கு பழகுகின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது.

அமரர் திருமதி நாகம்மை தம்பிரத்தினம் அவர்கள், நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் கொண்ட ஆசிரியையாக மிளிர்ந்தவர். தான் பெற்றெடுத்த பிள்ளைகளைப் போலவே ஊர்ப் பிள்ளைகளையும் நேசித்து அவர்களுக்கு அறிவுரைகள் கூறி நல்வழி காட்டியவர். பாடசாலையில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் உணர்வுபூர்வமாகப் பங்கெடுத்து சக ஆசிரியர்களுக்கும் முன்மாதிரியாகச் செயற்பட்ட செயற்றிறன் மிக்க ஆசிரியர்.

பாடசாலையில் வெள்ளிக் கிழமைகளில் இராமலிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுப் பிரார்த்தனைகளில், பக்தி சிரத்தையுடன் ஆசிரியை ஈடுபட்டதோடு தனது கணீர் என்ற குரலினால் மாணவர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி பிரார்த்தனை நேர்த்தியாக நடைபெறுவதற்கு அதிக கவனம் எடுத்துக்கொண்டவர்.

இவருடைய முன்மாதிரியினால் நான், மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றியபொழுது பிரார்த்தனை ஒழுங்காக நடைபெறுவதற்கு என்னால் பல உதவிகளைச் செய்ய முடிந்தது. அன்னாரின், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர்கள் என்பதால் அவர்களுடைய பங்களிப்பு பாடசாலையின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருடைய கணவர் திரு. தம்பிரத்தினம் அவர்கள் பாடசாலைக்கு நன்கொடையாக வழங்கிய வயற்காணியே தற்போதும் பாடசாலையின் விளையாட்டு மைதானமாக இருக்கின்றது. அன்னாரின் மகன் திரு. உருத்திரன் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்திற்குச் செய்த உதவிகள் அளப்பரியன.

அன்னார், யாழ்ப்பாணத்திலே பிறந்து வளர்ந்திருந்தாலும் தனது புகுந்த இடமாகிய மட்டுவிலையே தனது சொந்தமென நினைத்து வாழ்ந்தவர். இதனால்தான், மட்டுவில் மக்கள் அனைவரும் குறிப்பாக, யாழ்/மட்டுவில் கமலாசனி வித்தியாலய சமூகத்தினர், ஆசிரியையைத் தமது அன்னை என நினைத்து அன்பு காட்டினர்.
அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வைத்தியர், எஸ்.கே.கண்ணதாஸ்
Senior Lecturer in ELT,
Head.
Department of Translation Studies
Faculty of Arts.
University of Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே காண்போம் இனி..

நெற்றியை நிறைக்கும் திருநீறு முகத்தில்
நிறைவாகத் தெரியும் அறிவொளி அகத்தில்
பற்றுடனே அணைத்துப் பேசும் பண்பான பேச்சு
உற்றவராய் உறவாடும் உள்ளன்பு யாவும்
வற்றாத கடலாய் என்றும் வாழ்ந்த தாயே..
பற்றறுத்துப் பறந்தது எங்கோ தாயே – உங்கள்
பாசமுகம் காணுவது இனி எங்கே தாயே – மாயவனூர்
பரந்தாமன் காலடியில்தான் காணலாமோ.....
ஓராண்டில் பிறந்தவர்கள் என அறிந்த காலம் முதல்
என் தாயும் இருந்தால் இப்படி இருப்பார் என உள்மனது சொல்ல
சித்திராக்காவின் அம்மா ஈசண்ணையின் மாமியென்ற பாசத்துடன்
ஒவ்வொரு தரமும் நாட்டிற்கு வரும்போது வந்து பார்த்துப் பேசி வருவேன்.
இனி எங்கு யாரைப் பார்ப்பேன்!
உங்கள் பொக்கைவாய் திறந்து புன்னகைக்கும்
தனியழகு போனது எங்கே தாயே!
உங்கள் பிரிவால் துயருறும் உறவுகள் அனைவருக்கும் மன அமைதியும் ஆறுதலும் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இவ்வண்ணம்,
கொலண்டில் இருந்து,
திருமதி கலைச்செல்வி வசந்தானந்தம்
(சித்த ஆயுர்வேத வைத்தியர்
இராமநாதபுரம், கிளிநொச்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மை எனும் நங்கை நல்லார்...

நாகம்மை எனும் நங்கை நல்லார் - இந்த நானிலத்தில்
வாழும் வகை வாழ்ந்த பேறுடையார
ஊனமறு நல்லழகின் ஊற்றுடையார
வானம் புரந்தாற் போல் தன்நிழற்கீழ்
கல்வி தானம் பயந்து நின்ற தயாவானார்
எண்ணும் எழுத்தும் அறியவைக்கும் ஏற்றமுடைக்
கல்வி ஊட்டிய அறிவின் தாயானார்

என்ன தவம் செய்தனம் உன்னை
தாயாய் நாம் பெறவென்றே பிள்ளைகள் உருகிநிற்க,
சொற்சுவையும் பொருட்சுவையும் குழைத்த தமிழோடு,
நற்சுவையும் சேர நாவார அமுதீன்ற பாட்டியின்
பாசம் தேடி பேரப்பிள்ளைகள் பரிதவிக்க,
ஈசனடி தேடியோ பிரிந்தீர்கள்?

இம்மண்ணுலகில் பதி மனம்
கோணாத பத்தினியாய்,
பேணிவளர்த்திட்ட தாயாய்,
பள்ளித்தலம் காத்த தலைவியாய் ,
பேரச் செல்வங்களின் பெரும் நிழலாய்
வீற்றிருந்த உங்கள் வாழ்வின்
விளைச்சல் உலகறியும்!

போய்வருக தாயே!,
ஆடும் கழலிணைகள் உங்கள் ஆத்மாவுக்கு
தேறும் படியருள வேண்டி
அஞ்சலிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Dr. பிலோமினா திருச்செல்வம்
லங்கா சித்த ஆயுர் வேத வைத்தியசாலை
உடையார் கட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருத்தணிகை பல்பொருள் வாணிபம்

THIRUTHANIKAI TRADERS

இல்28, சில்வா வீதி, வட்டக்கச்சி. T.P: 077 7040975 No:28, Silva Road, Vaddakachchi

திருமதி நாகம்மை தம்பிரத்தினம் அம்மையார் மட்டுவில் கிழக்கில் நீண்டகாலம் சீரும் சிறப்புமாக வாழ்ந்து ஆசிரியப் பணியாற்றி தனக்கெனப் பெயர் பொறித்த பெருமாட்டி. தன் மக்களையும் சிறப்பாக வாழ வழிகாட்டிய கலங்கரை விளக்கு. தன் மூத்த மகள் திருமதி சித்திராதேவி பரமேஸ்வரன் அவர்கள் ஆயுர்வேத வைத்தியராக தொழில் நிமித்தம் கிளிநொச்சி மண்ணில் கால் பதித்து வட்டக்கச்சி கிராமத்தின் சில்வாவீதியில் காணி வாங்கிக் குடியேறினார். 1978இல் இருந்து இன்றைவரை சித்திரா அம்மாவின் வைத்திய சேவையினை எம் கிராமம் நன்கறியும். இரவு பகல் பாராது அழைத்தபோதெல்லாம் ஓடி வந்து சேவை செய்யும் பண்பாளர். கைநாடி பார்த்து கசாயம் முதல் பேதி வரை, தலைக்கு வைக்கும் எண்ணெய் என இயற்கை மூலிகை வைத்தியத்தை திறம்பட ஆற்றியவரும் எம் மண்ணுக்கு இச் சேவையை ஆற்றிக்கொண்டிருக்கும் அம்மையார் அவர்களை ஈன்ற தாய் என்ற பெருமைக்கு உரித்தான தாங்களும் போற்றுதற்குரியவரே.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திரு. இ. பத்மநாதன்
திருத்தணிகை பல்பொருள் வாணிபம்
இல: 28, சில்வா வீதி,
வட்டக்கச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்து
உண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே சகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரிகாப்பு

விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்

காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்

சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா

பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா

பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்

ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே

அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையோடு இணைவோம்
நோயின்றி இனிதே வாழ்வோம்

கோபம் குறைய அல்வா

தேவையான பொருட்கள் :-

கொய்யாப் பழம்	- 01 பெரியது (05) சிறிது
வாழைப்பழம்	- 2 அளவானது
பெருஞ்சீரகம், நற்சீரகம்	- 1/4 கரண்டி 1/4 கரண்டி
கஜூ பருப்பு	- 10
பனை வெல்லம்	- அளவு

செய்முறை :-

♦ பழங்களை பாத்திரத்தில் நசித்து வாணலியில் வதக்கி, சுருளும் பதத்தில் பொடி தூவி வதக்கி பனை வெல்லம் அளவாக சுவைக்கேற்ப பசுநெய் அளவாகச் சேர்த்து இலேகியப் பதத்தில் இறக்கி பத்திரப்படுத்தி காலை மாலை பாக்கின் அளவு உட்கொள்ளவும்.

♦ தாதுப்புக்கள், அமினோ அமிலம் ஆகிய ஊட்டச்சத்து மிக்கது. இதனால் ஞாபகசக்தி உண்டாகி மன சஞ்சலம் தீரும்.

♦ இதனை முதியோர் சிறியோர் அனைவரும் பாவிக்கலாம்.

பாத எரிச்சல்

மருதாணி விழுது	- 04 கரண்டி
நெல்லிக்காய் விழுது	- 04 கரண்டி

♦ இதனை தேங்காய் எண்ணெய் 50 மில்லி லீற்றர் நல்லெண்ணெய் 50 மில்லி லீற்றர் சேர்த்து வாணலியில் சூடாக்கி பாதிக்கப்பட்ட இடத்தில் இரவில் கால்களைக் கழுவிய பின் பூசிப் படுக்கவும். நரம்பு இறுக்கம், தோல் வரட்சி தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் கருப்பு புள்ளி

இரசாயன கலவை பூசுதல்
ஹோமோன்ஸ் ஏற்றத்தாழ்வு
சில மருந்துக்களின் தாக்கம்
மலச்சிக்கல்
மனக்கிலேசம்
நோய் எதிர்ப்பு சக்தி ஏற்படும்.

♦ இதற்கு சந்தனக் கட்டை, சந்தனக் கல்லில் தேசிப் புளி சேர்த்து அரைத்து தினம் ஒரு வேளை தொடர்ந்து பூச குணமாகும்.

நெஞ்செரிவு தீநீர்

நேரம் தவறி சாப்பிடுதல்
அதிக காரம், மது, அசைவ உணவு
அதிக காப்பி, தேநீர், அருந்துதல்

தேவையான பொருட்கள் :-

இஞ்சி	- 04 துண்டு
மிளகு	- 05
சீரகம்	- ஒரு சிட்டிகை
ஏலம்	- 01

♦ சேர்த்து 150 மில்லி லீற்றர் வரை வற்றக் காய்ச்சி தேன் சேர்த்து 30 மில்லி லீற்றர் வரை காலை மாலை அருந்தினால் சுகமாகும்.

♦ அருந்தும் பொழுது மெதுவாக உமிழ் நீருடன் சேர்த்து விழுங்க பலன் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிக்கால் வலி தீநீர்

தேவையான பொருட்கள் :-

கோரைக் கிழங்குப் பொடி	
மிளகு	- 07
சீரகம்	- ஒரு சிட்டிகை
கறுப்பு உழுந்துப் பொடி	- 1/4 கரண்டி
பனை வெல்லம்	

♦ *பாத்திரத்தில் 200 மில்லி நீர் விட்டுக் காய்ச்சி 150 மில்லி லீற்றர் வற்றியப் பின் 50 மில்லி லீற்றர் பனை வெல்லம் சேர்த்து மூன்று வேளை பாவிக்க வலி தீரும்.*

சக்கரை நோய்க்கு சலாட்

தேவையான பொருட்கள் :-

கோஸ் துருவல்	- 01 கப்
கரட் துருவல்	- 01 கப்
மிளகு	- அளவு
சீரகம்	- அளவு
தூள், உப்பு	- அளவு

♦ *இவற்றுக்கு அளவாக தேசிப் புளி விட்டு சாப்பிட்டால் நிரிழிவு நோய் குணமாகி, உடல் இயக்கம் சமநிலை ஆகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக வலிக்கு முள்ளங்கி பொரியல்

தேவையான பொருட்கள் :-

கடுகு	– 01 சிட்டிகை
பெருஞ்சீரகம்	– 1/4 கரண்டி
வெங்காயம்	– 01 கப்
முள்ளங்கி	– 01 கப்
பிஞ்சு மிளகாய்	– 01
கடலைப் பருப்பு	
உழுத்தம் பருப்பு	
நற்சீரகம்	– 02 கரண்டி

செய்முறை :-

♦ இவற்றை வாணலியில் இட்டு வதக்கி பின் இந்துப்பு, மஞ்சள் தூள், சிறிது நீர் தெளித்து கடைசியாக தேங்காய்ப் பூ அளவாகச் சேர்த்து கறிவேப்பிலை, மல்லி இலை சேர்த்து மதிய உணவில் சேர்த்துண்டால்

♦ ஊட்டச்சத்து, கல்சியம், மக்னீசியம், கந்தகம், முடி உதிர்வு, நோய் எதிர்ப்பு சக்தி, சளி, இருமல், வயிறு எரிவு, சிறுநீரகக் கடுப்பு, சிறுநீரகம் அடிக்கடி எரிவுடன் போதல் என்பன அற்றுப் போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் ஆணி பற்றுப்போட

மருதாணி இலை	– ஒரு பிடி
மருதாணிப் பட்டை	– 2g
வசம்பு	– 4
மஞ்சள் பொடி.	

♦ இவற்றை விழுதாக அரைத்து இரவில் பற்றுப் போட வேண்டும்.

இரத்த அழுத்த சூப்

முருங்கைக் கீரை	– 1 பிடி
அறுகம் புல்	– 1 பிடி
உள்ளிப் பல்	– 5
வெங்காயம்	– 6
சீரகம்	– 1/4 கரண்டி.

♦ இவற்றை விழுது பதம் அரைத்து, வாணலியிலிட்டு வதக்கி, அளவாக நீர்விட்டு சூடாக்கி இந்துப்பு, மிளகுத்தூள் சேர்த்து இறக்கவும். தினசரி காலை மாலை 50 மில்லி குடிக்க கண் பார்வை உண்டாகும். உடல் வலி தீரும். பித்தம் சமனாகி இருதய இரத்தோட்டம் சீராகும்.

♦ தலை இறுக்கம், வலி, கருப்பை நோய், சர்க்கரை நோய், கெட்ட கொழுப்பு நீங்கும்.
மக்னீசியம், பொட்டாசியம் ஆகிய ஊட்டச்சத்துகள் நிறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபக சக்திக்கு தீநீர்

பெருஞ் சீரகம்	– 1கரண்டி.
நற் சீரகம்	– 1 கரண்டி.
கராம்பு	– 1/2கரண்டி
ஏலம்	– 10
வாலுளுவை அரிசி	– 1/2 கரண்டி

♦ பனை வெல்லம் சேர்த்து 50மில்லி தினசரி காலை மாலை பருகவும்.

♦ மூளைச் செயற்பாடு, மூளை இரத்தோட்டம், சிந்திக்கும் திறன், மூளை நரம்புகள் பலம் மேம்படும். நரம்புத் தளர்ச்சி, அல்சர் நீங்கும்.

தேகம், கடி , நமைச்சல் தீநீர்

அரசம் கொழுந்து	– 5 இலை
இஞ்சி	– 4துண்டு
ஏலக்காய்	– 1
சீரகம்	– 1/4 கரண்டி

♦ பனை வெல்லம் சேர்த்து 50மில்லி பருகவும்.

♦ 200ml நீர் விட்டு 150ml ஆக காயம் எடுத்து 50ml மூவேளை குடிக்கக் குணமாகும்.

மனத் தாக்கம் தீநீர்

களிப்பாக்கு	– 5
கராம்பு	– 5
ஏலக்காய்	– 5

♦ இம் மூன்றையும் பொடி செய்து, 200 மில்லி நீரில் கொதிக்கவைத்து, 50 மில்லி வீதம் காலை மாலை பனை வெல்லம் சேர்த்துப் பருகினால் மனக் கிலேசம், ஹோமோன்ஸ் ஏற்றத் தாழ்வு நீங்கி புத்துணர்ச்சி உண்டாகும். ஏமாற்றம் தீர்ந்து மனோதிடம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி சிறுநீர் போனால்.....

நித்தியகல்யாணி வேர்ப்பொடி,
நித்தியகல்யாணி பூ,
மிளகு – 10,

♦ இவற்றுடன் 100ml நீர்விட்டு, 50ml அளவிற்கு வற்றக் காய்ச்சி அரிசி கழுவிய நீர் 50ml பருகினால் குணமாகும்.

சுவாச சம்பந்தமான நோய்க்கான தீநீர்

கண்டங் கத்தரி பழம் – 2
கராம்பு – 5

♦ 100 மில்லி நீர் விட்டு 50 மில்லி அளவிற்கு வற்றக் காய்ச்சி, 48 நாள் பருக தீராத இருமல், சளி, ஆஸ்மா, வெப்பநிலை சமனின்மை, பற்சொத்தை ஆகியன தீர்ந்து நோயெதிர்ப்பு சக்தி உண்டாகும்.

குழந்தைப் பேறு கிடைக்க சூப்

♦ காணாவாழை, இஞ்சி, மிளகு, பூண்டு, பெருஞ்சீரகம் ஆகியவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு விழுது பதம் வரை சூடாக்கி, இந்துப்பு சேர்த்து இறக்கி பருகவும். இதனால் மாதவிடாய் வலி, மார்புக் கட்டி, நரம்புத் தளர்ச்சி, சிறுநீரகப் பிரச்சினை, சளி, சுரம் ஆகியன தீர்ந்து சதை, எலும்பு பலம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் எடை குறைய சூப்

பூண்டுப் பல்	– 5
இஞ்சி	– /4 கரண்டி
மிளகு	– 1/2 கரண்டி
சீரகம்	– 1/2 கரண்டி
தக்காளி	– 1
மட்டுவில் கத்தரிப் பிஞ்சு வெட்டியது	– 1

♦ இவற்றை வாணலியிலிட்டுச் சூடாக்கி, நல்லெண்ணெய் 2 கரண்டி விட்டு வதக்கி அளவான நீர் விட்டு சூப் ஆக இறக்கி, தினசரி மூன்று வேளை 45 நாட்கள் பருக உடல் நிறை சமனாகும்.

பூச்சித் தொல்லைக்குத் தீர்வு

சிறிய வசம்புத் துண்டு	– 1
உள்ளிப்பல்	– 1

♦ தேன் சேர்த்து காலை மாலை பாவித்தால் மலத்துடன் பூச்சி வெளியேறும். மலவாசல் கடி தீரும்.

கை, கால், மூட்டு மற்றும் சகல தேக வலிக்கான கசாயம்

♦ வசம்பு, சீந்தில், சுக்கு, அரத்தை, அமுக்குரா, உள்ளி, வெந்தயம் (அனைத்தும் வகை 5 கிராம்) ஆகியவற்றைப் பாத்திரத்தில் இட்டு 250 மில்லி நீர் 150 மில்லியாக வற்றிய பின்னர் மூன்று நேரம் சாப்பிட முன் 50 மில்லி குடிக்கத் தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் வாந்தி எடுப்பதற்கு தீர்வு.

வசம்பு சுட்ட சாம்பல், தேன், தாய்ப்பால் கொடுக்கத் தீரும்.

குழந்தை வயிற்றுப் பொருமல், வீக்கம், அஜீரணம், பசியின்மைக்கு

சிறிது வசம்புத் தூள், சுக்குப் பொடி, வயிற்றின்மேல் கொப்பூழைச் சுற்றி பூசிவர குணமாகும்.

குதி வாதத்திற்குத் தீர்வு

நொச்சி இலை, வாதமடக்கி இலை, ஆடாதோடை இலை, மாவிலங்கம் பட்டை, இலுப்பை மரப்பட்டை ஆகியவற்றை இடித்து மண் சட்டியில் ஆமணக்கு எணெணெய் சேர்த்து வதக்கி இவற்றை குதிக்காலில் வைத்து வெள்ளைத் துணியினால் கட்டவேண்டும். மூன்று நாட்களுக்கு இதனைத் தொடர்ந்து செய்துவர குணமாகும்.

தலை மயிர் வளர பேன், பொடுகு கடிக்குத் தீர்வு

சீயாக்காய் பவுடர் சிகைக்காய் 250 கிராம், வெந்தயம், பச்சை அரிசி (சிவப்பு), மாதுளை ஓடு, தேசிக்காய் ஓடு, பயறு, களிப் பாக்கு, வெட்டி வேர், பொடுதலை, கையாந்தகரை, குப்பை மேனி இலை, மருதோன்றி இலை, வேப்பிலை, மாயாக்காய் (அனைத்தும் வகை 5 கிராம்) ஆகியவற்றைக் காயவைத்து பொடியாக்கவும். பின்னர் கிழமைக்கு இரண்டு நாட்கள் இதனைத் தலையில் வைத்து முழுகவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடி உதிர்தல், முடி நரைத்தல் (இளநரை), கண் எரிச்சல், வயிற்று நோய் எரிவு (அல்சர்), முரசு கரைதல், அதிக உஷ்ணம் (வெள்ளைபடுதல்), தேக எரிவு, சலம் எரிவு, நாரி வலி, மலச்சிக்கல், இளைப்பு, நரம்பு தளர்ச்சிக்கு தீர்வு

கரிசலாம் கண்ணி (கையாந்தகரை) சாற்றை பசும்பால், கற்கண்டுடன் 45 நாட்களுக்கு காலை, மாலை என அரை கோப்பை குடித்துவர குணமாகும்.

இரத்த சோகை நோய்த் தீர்வு

குப்பைமேனி இலை, கரிசலாம் கண்ணி இலை, வேப்பம் இலை ஆகியவற்றைச் சம எடை எடுத்து வெயிலில் காயவைத்து சூரணித்து அரை தேக்கரண்டி தேன் கலந்து காலை, மாலை என 45 நாட்களுக்குச் சாப்பிட்டுவர சோகை நீங்கிப் புத்துணர்ச்சியுடன் துரிதமாக இருப்பர்.

மூலரோக தீர்வு

முறை 1:

மாம்பருப்பு, கொய்யா இலைக்குருத்து, மாதுளை ஓடு ஆகியவற்றுடன் அரைத்த விழுது புளித்த தயிருடன் மூன்று கரண்டி உண்ண நோய் தீரும்.

முறை 2:

வட்டத்துத்தி இலை, சிறிய வெங்காயம் இடித்து ஆமணக்கு எண்ணெய்யில் வதக்கி, மலவாசலில் இரவில் கட்ட ஆசனக்கடுப்பு, கொதிவலி, இரத்தம் போதல், மூலத்தில் கடி, புண் போன்ற நோய்கள் தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை 3:

குமரிக் கற்றாழை சோற்றை, ஏழு தடவை நீரில் கழுவி பாலுடன் சேர்த்து, காலை, மாலையில் விழுங்கிவர சூட்டின் வேகம் குறையும்.

நீரிழிவு நோய்த் தீர்வு (பிரமேகம் அல்லது அதி மூத்திர ரோகம் என அழைப்பர்).

முறை 1:

அதிகாலை வெறும் வயிற்றில் மூலிகைச் சாறு அருந்த வேண்டும். மாவிலைத் துளிர், கொய்யாத் துளிர், நாவல் துளிர், மருதம் துளிர், வேப்பம் துளிர், குறிஞ்சா இலை, மணித்தக்காளி இலை, வில்வம் துளிர், விளாத்தி இலைத் துளிர், ஏதாவது ஒரு சாறு அரை கோப்பை குடிக்கலாம்.

முறை 2:

நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் சேர்ந்த திரிபலாதி சூரணம் அரை தேக்கரண்டி சாப்பிட முன்னர் தினமும் காலை மாலை சாப்பிடலாம்.

முறை 3:

நாவல் விதை சூரணம் அரைக் கரண்டி பாவிக்கலாம். அல்லது வெந்தயத்தை மூன்று நாட்களுக்கு ஊறவைத்து வரும் முளைத் தளிரை உண்டுவர நோய் தீரும்.

"அளவுடன் வாழ்வுக்காகப் புசிக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. அளவுடன் இருப்போம். நீடித்த சுக வாழ்வு வாழ்வோம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி நவில்கின்றோம்



இலங்கைத் தீவில் கொரோனா என்ற கொடிய வைரஸ் நோய் பரவலினால் நாடு முடக்கப்பட்டு மக்கள் வீடுகளுக்குள் முடங்கியிருந்த வேளையிலும் எமது இல்லத்தின் பேரொளியாகத் திகழ்ந்த திருமதி தம்பிரத்தினம் நாகம்மை அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதி யாத்திரையில் கலந்துகொண்ட உறவினர்கள் அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறல் நன்று.

தொலைபேசி முதலான பல்லூடகங்கள் வாயிலாகத் தமது அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்ட, உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் வாழ்ந்து வருகின்ற உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்!

அத்துடன், பத்திரிகைகள், பதாகைகள் மூலமும் மலர் வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்திய வர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவிவரும் இக்காலத்தில் சுகாதார நெறி முறைகளுடன் மரணச் சடங்கைச் செய்வதற்கு அனுமதி வழங்கிய சுகாதாரத் துறையினருக்கும் மரண வீடு முதல் வீட்டுக்கிருத்திய நிகழ்வு வரை எமக்கு உணவு வழங்கியவர்கள், பரிமாறியவர்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி நன்றிகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு, இறுதிக் கிரியை, சபிண்டீகரணக் கிரியை என்பவற்றை முறைப்படி நிறைவுசெய்த சிவாச்சாரியார் களுக்கும், திருமுறைகள் ஓதியோருக்கும் குறிப்பிட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டோருக்கும் நன்றி கூறுகின்றோம்.

மேலும், பந்தல் சேவையினருக்கும் அந்தியகால சேவையாளர்களுக்கும் இந்துமயான நிர்வாகத்தி னருக்கும் நாகம்மை அவர்களுக்கு காலக்கிரமத்தில் வருகைதந்து வைத்தியம் பார்த்த வைத்தியர்களுக்கும் நிறைவான நன்றிகள்!

அத்தோடு, நாகரத்தினமலருக்கு ஆத்மார்த் தமாக ஆன்மீக, வைத்தியக் குறிப்புக்கள், அஞ்சலி உரைகளைத் தந்து உதவியவர்களுக்கும் மலரை காலக்கிரமத்தில் அச்சிட்டுத் தந்துதவிய வேழன் பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்!

அஃதே, உதவிபுரிந்த யாரையும் தவறவிடப் பட்டிருப்பின் மன்னித்தருள வேண்டிக்கொண்டு நன்றி கூறுகின்றோம்.

'காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப்பெரிது'

நன்றி

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழித்தோ

அருணா

- தம்பிஜயா + பத்மநாதன் பரமேஸ்வரன் (குமுழமுனை)
  - கோமதியம்மா (கல்விளான்)
  - பானுமதி (குமுழமுனை)
  - இந்துமதி (குமுழமுனை)
  - சிவசம்பு (பிரான்ஸ்)
  - குணராகினி (குமுழமுனை)
- பொன்னுத்துரை + தெய்வானைப்பிள்ளை
  - யோகம்மா (மட்டுவில்)
  - கந்தசாமி
  - சிவபாக்கியம் (வட்டக்கச்சி)
  - பத்மநாதன் (வட்டக்கச்சி)
  - கமலாதேவி (மட்டுவில்)
  - சுந்தரலிங்கம் (முரசுமோட்டை)
- வீரசிங்கம் + குழந்தைநாச்சி
  - குணபூசணம் (லண்டன்)
  - குணரத்தினம் (நோர்வே)
  - குணேஸ்வரி (இடைக்காடு)
  - குணானந்தலட்சுமி (இடைக்காடு)
  - குணரஞ்சன் (அவுஸ்ரேலியா)
  - குணசேகர் (திருகோணமலை)
  - குணராகினி (இடைக்காடு)
- செல்லம்மா + ஆறுமுகம்
  - மகேஸ்வரி
  - மகேஸ்வரன்
  - பரமேஸ்வரி
  - பரமேஸ்வர
  - ஞானேஸ்வ
  - இராஜேஸ்வ
  - நகுலேஸ்வ
  - விக்கினேஸ்

- சண்முகலிங்கம்
- உலகநாதன்
- யுவனேஸ்வரி + எம்.ஏ.கந்தையா
  - சந்திராதேவி (கனடா)
  - சந்திரேஸ்வரி (கனடா)
  - சந்திரகுமார் (கனடா)
  - சந்திரகுமாரி (கனடா)
  - சந்திரகுரியகுமாரி
  - சந்திரகாந்தி (கனடா)
  - சந்திரகுரியன் (கனடா)
  - சந்திரஇந்திராணி (கனடா)
- ஜெயலட்சுமி
- கனகசபை + தங்கம்மா
  - தவமணிதேவி
  - தர்மலிங்கம்
  - தவராசா (லண்டன்)
  - உதயன்
- கோபாலசிங்கம் + ஜெயமணி
  - கரன்
  - ரூபன்
  - பாபு

- சித்திராதேவி + பரமேஸ்வரன் (வட்டக்கச்சி)
  - ஜனனி + கிஷோக்குமார்
    - லிபீஸன்
    - டிலக்ஸன்
    - ரீனா
  - ஆரணி + கணேசராஜன்
    - துசிதன்
    - அபிர்தனா
    - அபிநயா
    - பரதன்
  - கஜன் + கம்ஷிகா
    - சஸ்வின்
    - டியலக்ஸ்மி
  - நிலானி + துஷ்யந்தன்
    - ஹரிஸ்
    - காசினி
    - ஆஹாஸ்
- ரவீந்திரன் + நகுலேஸ்வரி (மட்டுவில்)
- ருத்திரன் + கலாவல்லி (கனடா)
  - யாழினி + மனோகரன்
    - அர்வின்
  - கிருஷ்ணி
- சந்திரன் + மனோகரி (கனடா)
  - ஷாந்தன்
  - சசிகலா + ரீகாந்தன்
    - மதுரா
    - விஹாசன்
    - நுலேசியா
  - சுபா + பிரசன்னா
    - லோஷன்
    - லோஷிகா
    - லோஷிதன்
- மோகன் + அம்பிகா
- இந்திரகுமார் + பாலகணேச (கனடா)
  - தர்சன்
  - தனுச + நோர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழித்தோன்றல்கள்

அருணாச்சலம் + ஆச்சிமுத்து



❖ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகப் பாடல்

தரணியில் சிறப்புற்று வாழ்ந்த சீர் குலத்தோரே
தம் பரியாரிப் பெருஞ்சேவையில் மாண்பும்
நம்பி வருவோர்க்கு உவந்தமுதும் அளித்து
சித்திர வாழ்வில் சீரும் சிறப்புற்று வாழ்ந்தவரே
வையத்தில் தங்கள் பெருவாழ்வு வழிகாட்டியாகவும் - நம்
நெஞ்சத்தில் நீங்காத பெரும் ஒளியாகவும் - எம்மை
நாக ரத்தின தீபங்கள் துணை நின்று காத்திடுவீர் – நம்முடன்
என்றென்றும் கலங்கரையாய் மிளிர்ந்திடுவீர்!

அஃதே...

நானிலத்தில் அவதரித்த புன்சிரிப்பின் நாயகியே - கல்வித்
தாகத்தை அன்புகொண்டு அறிவூட்டித் தீர்த்தவரே
வரம் தான் எமக்கு நீர் பெருந்தாயாய் கிடைத்தமை - தமிழ் குலமே
பெருமை கொள்கின்றது நாக ரத்தின மூத்தோர் வாழ்வுகண்டு!!!

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. 021 228 5579
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org